# சிலம்பு சிரித்தது



இ. நாகராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலம்பு சிரித்தது

( கவிதை நாடகம் )

ஆசிரியர்
இ. நாகராஜன்

விற்பனையாளர்:

எஸ். கிருஷ்ணசாமி
(பத்திரிகை, புத்தக விற்பனையாளர்)
33, பெரியகடை, யாழ்ப்பாணம்.

— 1969 —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: ஜனவரி 1969.

விலை: ரூ. **1-50**

சகல உரிமைகளும் ஆசிரியர்க்கே.

கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம் 2613—69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

இந்நிலத் தென்னைப் பெற்றே
இதயமே மலர்ச்சி உற்றுத்
தன்னுயிர் அன்பி னோடு
தகவுறக் கல்வி யூட்டி
என்னையே பேணிக் காத்த
இராமுவாம் தந்தை யாரின்
பொன்னடிக் கிந்நூல் வைத்தே
பொலிவினல் பூரிக் கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சங்கத் திருந்துலகில்
சால்புற்றுச் சான்ருேரால்
எங்கும் புகழ்பரப்பி
இலங்கும் எழிலோடு —
காலக் கடல்கடந்து
கலைகள் மருவியுயர்
சீலந் திருந்துணர்ச்சி
சேர்ந்தொளிரும் செந்தமிழில்

பூத்துக் குலுங்குகிற
பூங்கவிதை ஏடுகளுள்
நேர்த்தி மிகுந்துமக்கள்
நெஞ்சத்தை ஆளுகின்ற
ஆற்றல் அடைந்தின்றும்
ஆன்ற அறிஞர்களின்
போற்றுதலுக் காட்பட்டுப்
பொலியும் சிலம்பொன்றே!

மன்னன் மரபுதித்தும்
மணிமுடியை நீக்கிவிட்டு
தன்னே ரிலதான
சால்புத் துறவடைந்தும்
பற்றுத் தமிழ்மீதே
உற்றதனுல் பண்பட்டு
பன்னூடும் போற்றவல்ல
பாங்காய் இளங்கோவன்
முன்னுள் அமைத்தகவி
முத்தாய் இலங்குதிங்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலனும் தன்பதிக்குக்
கோதையுயர் கண்ணகிகால்
மேவும் சிலம்பீந்து
விற்கப் பணிப்பதுடன்
தொடங்கி மதுரையிலே
துட்டவஞ்சி செய்சதியால்
மடங்கி மதுரைமன்னன்
வாளுக் கிரையானன்;
காலின் சிலம்புடைத்துக்
கனன்றே யுயர்நீதி
ஞாலத்தே தாழ்ந்ததனை
நல்லறிஞர்க் கேகாட்டி
தீயால் மதுரைநகர்
சீரற்றுப் போகவன்னுள்
தூயவளாம் கண்ணகியும்
தொல்லுலகில் செய்துயர்ந்தாள்.

இந்த நிகழ்ச்சிகளை
இங்குகவி நாடகமாய்
சொந்தக் கவியாலே
சொல்லியுள்ளேன் உங்களுக்கே.
அன்பால் பிரவகிக்கும்
ஆன்ற குணத்தாலே
இன்ப முகமலர்ச்சி
ஈர்க்க வரவேற்று
நன்றி தனைப்புரிந்த
நல்லவர்கள் யாவருக்கும்
ஒன்றும் இறைவனருள்
உண்டாக வேண்டுகின்றேன்!

2, முதலாம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்,
23-12-1968.

அன்பன்,
இ. நாகராஜன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாத்திரங்கள்

கோவலன்

கண்ணகி

பாண்டியன்

வஞ்சி

மாதரி

இடைச்சியர் மூவர்

காவலர் இருவர்

வாயிற்காவலன்

அட்டதிக்குப்பாலகர் } அசரீரிகள்
செங்கதிர்ச்செல்வன் }

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 1

இடம் : மதுரையில் ஆயர்பாடி.

பாத்திரங்கள் : கோவலன் — கண்ணகி.

கோவலன் : நற்றவ நாட்டை நாளும்
நலமுறப் பேணிக் காத்த
பெற்றவர் உறவை யெல்லாம்
பிரிந்துமா துன்பம் உள்ளம்
பற்றியே படரப் பாங்கார்
பாண்டியன் பதியை நாமும்
உற்றனம், இவற்றிற் கிந்த
உலுத்தனே ஏதா யுள்ளேன்.

கண்ணகி : ஐயனே! கடந்த கால
அல்லலை உன்னி உன்னி
நைவதில் அர்த்த மில்லை
நலம்பல தேக்கி நாளை
வையக மீதில் மேன்மை
வயங்கிடும் வாழ்வு கொள்ள
செய்யசீர் மரபுக் கான
செய்வினை செய்தல் வேண்டும்.

கோவலன் : கண்ணகி, கற்பின் செல்வி!
காசினி மீதில் பூத்த
பெண்ணினத் தோர்கள் எல்லாம்
பீடுறப் பிறந்த உன்னைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிய மில்லா வாறு
கவலையாம் கடலில் ஆழ்த்தி
வண்ணமார் வாழ்வை மண்ணில்
வாட்டிய தீயோன் நானே.

கண்ணகி : கவலையை விடுக! அன்புக்
கணவஞர் பக்கம் நின்ருல்
அவனியில் பெண்மைக் கான
ஆக்கமும் வேறுண் டாமோ?
நவமுறு வளத்தைக் காண
நாம்தினம் முயற்சி கொண்டால்
தவக்குல மேன்மை மீண்டும்
தழைத்திடும், ஆகை யாலே
அன்புறு தலைவ! நேற்றிங்
கழிந்தவை தனையே எண்ணி
இன்புறும் எதிர்கா லத்தை
இழந்திடல் மதியே யல்ல,
துன்பெனும் கடலை நீந்திச்
சுதந்திர இன்பம் கொள்ள
பொன்பொருள் சேர்க்க உண்மை
பொருந்திய வணிகம் செய்வோம்:

கோவலன் : முன்னைய மரபுக் கொப்ப
முறைப்படி வணிகஞ் செய்ய
இந்நகர் தனிலே மார்க்கம்
எங்குள? தென்றன் கையில்
பொன்னிலைத் தெரிந்தோ ரில்லை
போயெவ ரிடத்திற் கொள்வேன்?
புன்னிலை யோடே யிங்கே
புழுங்குதல் விதிய தாமே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பொரு ளிருக்கு மானல்
கணக்கறிந் ததற்கே யான
செப்பமாய் வணிக மாற்றும்
திறனெனக் குண்டு! நானே
தப்பிதம் செய்து தாழ்ந்தோன்
தரித்திரன், துன்ப ஆற்றை
எப்படித் தாண்டு வேனே?
என்விதி இதுதான் பெண்ணே!

கண்ணகி : அன்பரே அச்சம் எற்கோ?
ஆன்றநல் குடியிற் பூத்தீர்
முன்புளோர் முறைமைக் கொப்ப
முருகமை சிலம்பி ரண்டை
என்பதங் களிலே இட்டார்
இரண்டினில் ஒன்றை விற்றுப்
பொன்பொருள் கொண்டே நீவிர்
புரிகுக! வணிகம் நன்றே

கோவலன் : என்னநீ சொன்னய் மாதே
இருநில மீதெ னக்காய்
உன்னருஞ் செல்வந் தன்னை
உவந்தளித் தின்னல் கொண்டாய்;
பின்னரும் உன்பொற் பாதம்
பிறங்கிடும் சிலம்பை விற்று
என்னலம் கொள்வேன்? அந்தோ!
இழிவிதாம் எனக்கு வேண்டாம்.

கண்ணகி : எந்நிலை உற்ற போதும்
எங்குலம் கணவ னுக்காய்
தன்னிலை இழக்க இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்கிடா தையா! பொன்னே
துன்னியோ ரிடத்தில் நில்லா;
தொலைவுறும் ஆனல் அன்பு
பின்னிய வாழ்வால் பெண்கள்
பெருமையே உறுதி யாகும்.
ஆன்றபே ரவையின் கண்ணே
அடியவள் கரத்தைப் பற்றித்
தோன்றலே! துணையாய்க் கொண்ட
தூயநற் கணவன் முன்னே
ஈன்றவர் சோத ரர்கள்
ஏவருமே சிறிய ராவர்;
சான்றெனச் சரித்தி ரங்கள்
தரணியில் அனந்தம் உண்டாம்.
கூடையிற் றெழுநோய் கொண்ட
கொழுநனை வைத்துத் தாசி
வீடதை அடைந்த பெண்ணும்
வேதனை கொள்ள வில்லை,
பீடமை அவளின் கற்பால்
பிறங்குமா பரிதி கூட
நாடதிற் கடமை செய்யா
நலிவினை அடைந்த காதை
ஞாலமே அறயும், நாதன்
நலிவுற எனது புன்மைக்
காலிலே இலங்கு கின்ற
கவின்மணிச் சிலம்பை உள்ளம்
மேலெனக் கொள்ளா, ஆன்ற
சீலநீ இதனை விற்றே
சீரிய வணிகஞ் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலன் : மன்றிலே கரத்தைப் பற்றி
வாழுநாள் எல்லாம் அன்பால்
அன்றில்போல் வாழ்வோ மென்றே
அறைந்தநான் பரத்தை வீடு
சென்றுமென் செலவுக் காகச்
செல்வியுன் உரிமை யான
குன்றனை செல்வம் யாவும்
குலைவுறக் கொடுமை செய்தேன்;
வேண்டிய போதெல் லாம்நீ
விருப்புடன் ஈந்து நீதி
தாண்டிய எனக்கும் அன்பு
தந்துளாய்; மேலும் ன்கால்
பூண்டுள சிலம்பை ஈயப்
பூவையே முயல லாமா?
ஆண்டவன் பொறுக்க மாட்டான்
அப்பழி வேண்டாம் அன்பே!

கண்ணகி : பதிநலம் ஒன்றே பாங்கார்
பாவையர்க் குரிய தான
நிதியமாம், நீண்ட நாளாய்
நிலைபெறும் இந்தப் பண்பு
புதிதல, நாதன் வாழப்
பூவையர் தொண்டு செய்யும்
விதிதனைத் தடுக்க லாமா?
வேதனை எற்கோ? அன்புச்
சதியிவள் சொத்துச் சால்பார்
தங்களின் சொத்தே யாகும்;
புதியதோர் வாழ்வு நாளைப்
பூத்துமே சிறக்கு மானல்
நிதியமும் பெருகும் நேர்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறும் நாதா! இங்கே
அதிகதை பேசிக் கால
அழிவினை ஆக்கி டாது
துதியுமக் கீந்தேன் செல்க
சுதந்திர இன்பம் கொள்க.

கோவலன்: கதியிலா எனக்கு மீண்டும்
கதியினைக் காட்டும் அன்புச்
சதியுனை ஒத்தார் இந்தத்
தரணியில் உளரோ? இல்லை
விதியையும் வெற்றி கண்டு
மேன்மையைத் தரவே வல்லோய்!
நீண்டநாள் துயரில் நீயும்
நெருப்புறு புழுவா யாக
ஆண்டவன் அமைத்த ஆன்ற
அறத்தினில் விலகிப் பொம்மை
பூண்டவள் கையின் கண்ணே
பொம்மையாய்ப் புரண்டேன்; நீதி
தாண்டினேன்; தரித்தி ரத்தால்
தாழ்ந்துளேன் இதுவே வேண்டும்.

கண்ணகி: கடந்ததைக் கூறிக் கூறிக்
கவலையைப் பெருக்கி டாதீர்!
தொடர்ந்துள துன்பந் தன்னைத்
துண்டமே செய்து வெற்றித்
திடமுடன் வெளியே சென்று
சிலம்பினை விற்றுப் பொன்னால்
படிமிசை வணிக மாற்றிப்
பாங்குற வாழ்வு காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலன் : திடமமை கற்பின் செல்வி
சீலமார் உன்சொற் கேட்டு
விடந்தனை விழுங்கி நின்ற
வேதனை யோடு செல்வேன்.
நடந்துநான் மதுரை நண்ணி
நன்மணிச் சிலம்பை விற்று
படியினை புரந்து வானப்
பரிதியும் மேற்றி சைக்கண்
விழுமுனே வருவேன், நீயும்
விமலனை மனத்தி னுலே
தொழுதிவண் இருப்பாய்; யாவும்.
சுபமுற நிறையு மாமே.

கண்ணகி : செல்லுக மதுரைக் கிந்தச்
சிலம்பினை விற்று நீவிர்
அல்லது சூழு முன்னே
அடியவன் இருக்கை நாடி
வருதலே வேண்டும்; காலம்
வழுவினுற் றுடிப்பேன்; அன்ப
வல்லனும் பரனின் ஆசி
வழங்குவன் சென்று வாரீர்!

—திரை—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 2

இடம்: மதுரையில் வஞ்சியின் மனை.

பாத்திரங்கள்: வஞ்சி – கோவலன்.

குறிப்பு: வீதியில் கோவலன் முதலில் வருகை.

### கோவலன் இசைப்பாடல்

விதியின் கொடுமையை விலக்குவார் உண்டோ?
விமலனின் ஆணையைத் தடுப்பவர் யாரோ?
(விதி)

ஆனைமீ தேறி அமர்ந்தவன் நாளை
அகன்றுள வீதியில் நடந்துமே செல்ல
வானவன் விதியை வகுத்துவிட் டாலதை
மாற்றிடு வோரும் மண்மிசை உளரோ?
(விதி)

காரண காரியத் தொடர்புக ளின்றிக்
கவலைகள் நம்மை அடையுமோ? அந்தப்
பூரணன் அருளைப் புரிந்திடு வோரே
புவனியில் உய்யும் புண்ணிய ராவர்.
(விதி)

[கோவலன் பாடிக்கொண்டே வஞ்சிப்பத்தன் இல்லத்தை அடைதல்]

வஞ்சி: ஐயநீ யாரோ இங்கே
அமருக! இருக்கை மீதிங்
கெய்திய கார ணந்தான்
எதுவென இயம்பு வீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவ : செய்யபொன் கொண்டே மன்னர்
திருமுடி படைக்க வல்ல
செய்வினை யாளன் நீராம்
செப்பினர் இந்த நாட்டில்.

வஞ்சி : மன்னர்தம் முடிப டைத்தல்
மரபுறு தொழில்தான் நீவிர்
என்னகம் நண்ணு தற்கிங்
கேதெது முளதோ கூறுய்!

கோவ : என்னிடம் சிலம்பொன் றுண்டிங்
கேற்றநல் விலைக்கே விற்றுப்
பொன்னினைப் பெறவே மார்க்கம்
புகலுவீ ரென்று வந்தேன்!

வஞ்சி : ஒற்றையா சிலம்பு யார்தம்
உடமையோ? உரைப்பீர் நன்றே.

கோவ : ஒற்றையென் றதனுல் ஐயம்
உடையவ ரானீர் போலும்
குற்றமில் குணத்திற் பூத்த
குலமுடை மனையாள் காலின்
பெற்றியார் சிலம்பி தாகும்
பிழைமனம் கொள்ளா தேநீ.

வஞ்சி : காட்டுக சிலம்பைப் பார்ப்போம்
கவினுற அமைந்த தானுல்
நாட்டினில் எவருக் கேனும்
நலம்பெற விற்றல் சாலும்.

கோவ : காட்டுவேன் சிலம்பைப் பாரீர்
கவினுறு கலைபொ திந்தென்
நாட்டினர் வினைத்திட் பத்தை
நவிலுநல் உண்மை ஓர்வீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[கோவலன் சிலம்பைக் கொடுக்க
வஞ்சி பார்வையிடல்]

கோவ : சிலம்பிது புறத்தில் மட்டும்
சிறப்பினை உடைய தல்ல
உலகிடை உயர்ந்த தான
ஒயிலுடைப் பரல்கள் இந்தச்
சிலம்பினுள் செலுத்தப் பட்ட
சீருடன் ஒளிர்வ தாகும்.

வஞ்சி : ஆ! இது! போல வென்றன்
ஆயுளில் பார்த்த தில்லை,
பூவினிற் கலையின் மேன்மை
பொருந்திய தாக நுட்பம்
மேவிடத் திட்ப மாக
விளங்குதாம்; இதன்சி றப்பை
நாவினுற் செப்பு மாற்றல்
நற்றமிழ் ஞானங் கொண்ட
பாவலற் கன்றி இந்தப்
படியினில் மற்ருேர்க் கில்லை....
வடிவினில் வார்ப்பில் மேன்மை
வயங்குமிச் சிலம்பைப் பூணும்
தொடியிடை கணவ ஞநீ?
தோற்றமோ வேருய், பொல்லா
மிடிமையில் வாடி நன்கு
மெலிந்தது போல உள்ளீர்?
கூறுவ தனைத்தும் மெய்ம்மை
கொண்டதா? என்னை மாட்டி
மாறுதல் செய்வ தற்கே
மனையிடை புகுந்துள் ளீரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவ:- உலகினில் ஒழுக்கந் தன்னை
உயிரெனப் பேணிக் காக்கும்
குலத்திலே உதித்த வன்நான்;
குணமெனக் குரிய சொத்து!
நலத்தலே சிறந்த இந்த
நன்மணிச் சிலம்பைப் பூண்டாள்
பலம்மிகு பண்பில் மிக்க
பத்தினி யாவாள் ஐயா.

வஞ்சி:- அத்தகை அரிவை யட்கே
ஆனநற் கணவ னுஞல்
இத்தரைக் கேன்நீர் வந்தீர்?
இச்சிலம் பதனை விற்க
சித்தமேன் கொண்டீர்? இங்கே
செப்புக விளக்க மாக

கோவ:- பூதலந் தனிலே பொன்னும்
பொருளுமோர் இடத்தில் நில்லா
காதலார் மைந்த ேனாடு
கட்டிய மனைவி தன்னை
வீதியில் விற்றுப் பொல்லா
வெட்டியான் தனக்காட் பட்டு
வேதனைப் பட்ட வேந்தன்
விதியதன் கையின் பொம்மை.
மலையது மடுவ தாகும்
மடுவதும் மலைய தாகும்
நிலையிலாச் செல்வந் தன்னை
நித்தியம் கட்டிக் காத்தோர்
உலகிடை மெலிந்து வீதி
ஓரமே நிற்பர், மேன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலவிட உயர்ந்தோர் நாளை
குப்பைசேர் மேட்டில் குந்தி
பலதுயர் படுவர் அன்றோ!
பாரினில் விதியி னாலே
கதியினை இழந்து காலம்
காட்டிய கொடுமை தள்ள
நிதியினைச் சிலம்பால் பெற்று
நேரிய வணிகஞ் செய்து
புதியதாம் வாழ்வு காண
பொலிவமை மதுரை வந்தேன்!

வஞ்சி:- நீவிரிங் குரைத்த யாவும்
நேரிய தானால் இந்தப்
பூவிலும் ஊரும் பேரும்
புரிதொழில் யாவும் கூறீர்.

கோவ:- பூவிரி சோலைக் கூடே
புள்ளினம் கூடி இன்பப்
பாவிசை செய்ய மஞ்ஞை
பரதமே பயிலத் தென்றல்
தாவியெண் திசைகள் யாவும்
சார்ந்துநற் குளிர்மை யூட்டும்
ஓவிலா வளங்கள் ஓங்க —
உயர்குட மலையில் ஊறி
காவிரி நடந்து வந்து
கழனியைக் காக்கும் சோழ
நாடதே என்றன் நாடாம்.
நற்றவ மரபில் உண்மைத்
தேட்டமே தேடி மேன்மை
சிறந்திடச் செப்ப மார்ந்து
வாட்டமார் ஏழை கட்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையவர் தமக்கும் ஈந்தே
ஊட்டமாம் அறங்கள் ஓம்பும்
உயரிய வணிகர் என்ற
நற்றவக் குடியிற் பூத்து
நானிலத் திசைகள் போற்றும்
பெற்றிகொள் மசாத்து வான்றன்
பிள்ளையாய்ப் பிறந்தேன் என்னைக்
கோவலன் என்பார் இன்று
கொடியபேர் மிடிமை யாலே
கேவலங் கொண்டே அன்பு
கெழுமிய மனைவி பாதம்
மேவிய சிலம்பை விற்று
மீண்டுநல் வாழ்வு கொள்ளும்
ஆவலால் உன்இல் வந்தேன்
ஆவன செய்க நீயே.

**வஞ்சி :** விதியதன் விசையி னாலே
வீழ்ந்தவுன் நிலையை நீக்கிக்
கதிபெற வல்ல பாதை
காட்டிட முயல்வேன். ஆனால்
புதுமையார் சிலம்பிற் கேற்ற
பொன்னினை ஈவோர் யாரோ?
மதியினைக் குழப்பி னாலும்
வழியினைத் தெரிந்தே னில்லை.

**கோவ :** அப்படிக் கூறி டாதே
அருமணிச் சிலம்பை நீயே
எப்படி யேனும் விற்றென்
ஏழ்மையை நீக்கி, மீண்டும்
செப்பமார் வாழ்வு கொள்ளச்
செய்திட வேண்டும் நண்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சி : குலந்திகழ் குணத்தில் வந்தோய்
கூறிய நிலைமைக் காக
நிலந்தனை ஆளும் மன்னர்
நேரினிற் சென்றே உன்றன்
சிலம்பினைப் பற்றி நானும்
செப்பினுல், அதற்கே ஏற்ற
விலையினைத் தருவான் துன்பம்
விடியவும் மார்க்க முண்டாம்.

கோவ : மன்னரோ! அன்றி இந்த
மண்டலம் மதிக்க வல்ல
பொன்னுடை யார்கள் யாரோ
பொருந்திய பொன்னை ஈந்தால்
என்னரும் சிலம்பை விற்பாய்;
இனிமொழி வேண்டாம் செல்க!

வஞ்சி : பாண்டிய மன்னன் தன்னைப்
பார்த்துமே பேசி நானும்
மீண்டுமே வரும்வ ரைக்கும்
விலகிடா திங்கி ருப்பாய்.

கோவ : ஆவலாய் இருப்பன் நாளை
அமைந்தநல் வாழ்வுக் கான
ஓவிலா இன்பம் உன்கை
உள்ளதாம்; சென்று வெற்றி
மேவிய உள்ளத் தோடு
மீண்டுநீ வருக! பாண்டிக்
காவலன் சிலம்பைக் கண்டால்
களிப்புடன் கொள்வான் செல்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[வஞ்சி வீதியில் தனித்துப் பாடிச் செல்லல்]

இசைப்பாடல்

பாண்டிய மன்னரின் பட்ட மகிஷியின்
பாதச் சிலம்பைப் பழுதுசெய்ய
வேண்டிவந் தேனதைப் போக்கடித் தேபெரும்
வேதனையா லிங்கு நொந்திருந்தேன்.

அந்தச் சிலம்பினை ஒத்ததுவாய் அழ
கான சிலம்பினைக் கொண்டுவந்தான்
செந்தமிழ் மன்னர்முன் பொய் புகன்றேனென்றன்
சென்னியைக் காத்திட நான்முயல்வேன்.

மண்டல காலத்தின் முன்னே சிலம்புடன்
மன்னன் வரவே யெனைப்பணித்தான்
தண்டனை இன்றிநான் தப்பிட வேயிவன்
தக்க தருணத்தில் வந்துவிட்டான்.

— திரை —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 3

இடம் : பாண்டியன் மனை

நேரம் : நடுப்பகல் தாண்டிய வேளை

பாத்திரங்கள் : பாண்டியன் - வஞ்சிப்பத்தன் - காவலாளர்

வஞ்சி : மதிக்குல மன்ன வாழி !
வளமிகு செங்கோல் வாழி !
புதுக்கலை தமிழைக் காக்கும்
புகழுனை கொற்றம் வாழி !

பாண்டி : வருகநீ வஞ்சி மாண்பார்
மன்றமே கலைந்த வேளை
வருவதன் கார ணத்தை
வழுத்துக விளக்க மாக.

வஞ்சி : பொய்யர்கள் திருடர் வஞ்சர்
புரட்டர்கள் தீயோ ரின்றி
உய்துயர் பாண்டி நாடென்
றுரைப்பரெம் நாட்டை, ஆனால்
பொய்யதாய் அந்த மேன்மை
போனதால், திருடர் மல்கச்
சிறுமைகள் மலிந்த தையா !

பாண்டி : வாய்மையை உயிராய்க் காக்கும்
வண்டமிழ்ப் பாண்டி நாட்டில்
தூய்மையே தொலையப் புன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்ததா? ஆன்ற பண்பில்
தோய்ந்தவர் என்ன ஆனார்?
சொல்லுக உன்றன் வார்த்தை
ஆய்வுள தாமோ? அன்றி
அற்றமாய் அமைந்த தாமோ?

வஞ்சி : நல்லவர் இன்றும் உள்ளார்
நஞ்சினைப் பாலிற் பெய்தால்
நல்லதோ? பாலுக் கன்றே
நாசமாம்; நலிவு செய்யும்
புல்லனும் புகுந்த செய்தி
புரியுமோ மன்ன இங்கே?

பாண்டி : புல்லனா புகுந்தான்? புண்யப்
புகழமை நாட்டில்; எந்த
எல்லையி லிருந்து வந்தான்?
இயம்புக விளக்க மாக.

வஞ்சி : நல்லவன் போல்ந டிப்போன்;
நலமுறப் படித்தே உள்ளான்;
சொல்லினால் மடக்க வல்ல
சூழ்ச்சியும் அறிவான். அன்னோன்
சோறுடைச் சோழ நாட்டில்
தோன்றினேன் என்றான். ஞானப்
பேறுடைக் குடியிற் பூத்த
பெரியவன் என்றுஞ் சொன்னான்.
மாறுகள் செய்யா மாண்பு
மல்கிய வாறு பேசும்
ஆற்றலும் உடையான். ஆனால்
அற்பனோ திருட்டில் பொல்லா
ஆற்றலைக் கொண்டோன். அந்தோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவன் செய்த தீமை
மாற்றிடற் குரிய தல்ல
மாண்பமை நமது நாட்டின்
போற்றலுக் குரிய பெற்றி
போயது மன்ளு . . .

பாண்டி : ஆகா!
அத்தகை கொடிய தான
அற்றமிங் கெதுதா னென்றும்
இத்தரை அவன்சேர் ஏதும்
ஏதுவெனக் கூறு வாயோ?

வஞ்சி : மன்னவ நீவிர் பட்ட
மகிஷியின் சிலம்பில் ஒன்றை
என்னிட மீந்தே முன்னுள்
எழில்பெறத் திருத்தச் சொன்னீர்....

பாண்டி : முன்னரோர் சமயம் வந்து
முருகமை சிலம்பை யாரோ
கன்னமிட் டெடுத்தா ரென்று
கழறினை, ஆனல் நானே
மண்டல காலத் துக்குள்
மணிச்சிலம் புடன்வா அன்றேல்
மண்டலந் தனிலே எங்கு
மறைந்துறைந் தாலு முன்னைக்
கண்டுமே பிடித்து நீசெய்
களவதற் குரிய பொல்லாத்
தண்டனை யாக உன்றன்
தரத்தினைக் கொய்வே னென்றேன்.

வஞ்சி : தலையினைக் கொய்வே னென்றீர்
தண்டனை தன்னை யெண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகுலை யிதயத் தோடு
நேரிய மன்ன இந்த
உலகிடை அலைந்த போதவ்
வுலுத்தனைக் கண்டேன் நானே!

**பாண்டி :** விளம்புக; மேலும், சொல்லில்
விளக்கமே காணேன் இங்கே.

**வஞ்சி :** மன்னவ சிலம்பு தேடி
மனத்துய ருடனே சென்றேன்;
எந்நிலை தெய்வத் துக்கே
இரக்கமாய் ஆன தாச்சோ?
என்னவே, இன்று காலை
எழில்மணி மதுரை நாட்டில்
பொன்னொளிர் சிலம்போ டந்தப்
புல்லனைக் கண்டு, பேசி
அன்னவன் சிலம்பைப் பார்த்தே
அணிமணி அரசி யாரின்
சிலம்பது என்றே ஓர்ந்து
சிந்தையை அடக்கி மெள்ளப்
பொலந்திகழ் சிலம்பு பற்றிப்
புகலுக என்றேன், அன்னோன்
விலையினுக் கீவ தற்கே
விரும்பிய தாகச் சொன்னான்.
"சீரிய சிலம்பை வாங்கும்
செல்வமிங் குடையோர் இல்லைப்
பார்திகழ் பாண்டி மன்னன்
பார்த்துளன் ஆனால் இந்த
ஏர்திகழ் சிலம்புக் கேற்ற
இயல்புடைப் பொன்னை ஈவான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுநான் கூற அன்னுன்
என்னிடம் அதற்கே யான
"பொன்னையே பெறவே மார்க்கம்
புரிகுக! நீயே" என்ன
என்றனில் இருத்தி இங்கே
ஏந்தலே வந்தேன் கேட்பீர்.
புன்மையே தொழிலாய்க் கொண்ட
புல்லனை விட்டு வைத்தால்
பூவிடைக் கொடுமை ஓங்கும்;
புண்ணியச் செயல்கள் யாவும்
தாவியே அகலும்; ஏற்ற
தண்டனை தருக! மேலும்.
மன்னரே! அவனே வஞ்சன்
மறுத்துபல் வாதஞ் செய்தே
நன்னயப் பேச்சுங் காட்டி
நலிந்தவன் போல்ந டித்து
தப்பிட முயல்வான். அன்னுன்
தப்பியே விட்டால் நாசம்
இப்பதி மீதில் ஓங்கும்
ஏற்றன உடனே செய்வீர்.

**பாண்டி :** யாரடா காவற் காரா!
இவனுடன் கூடிச் செல்க
சீருடைச் சிலம்பி னேடு
திருடனங் கிருந்தா னுல்
கூரிய வாளாற் சென்னி
கொய்துயர் சிலம்பை என்றன்
நேரினில் கொண்டே வாநீ

—திரை—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 4

இடம்: வஞ்சிப் பத்தன் வீடு

பாத்திரங்கள்: கோவலன் — வஞ்சி — காவற்காரர் இருவர்.

குறிப்பு: வஞ்சி காவற்காரரை வெளியே நிறுத்தி விட்டு உட்செல்லல்

கோவ : ஐய நீ! சென்ற வேலை
அமைவுற முடிந்த தாமோ?

வஞ்சி : ஐயனே! அரச னுக்குன்
அணிச்சிலம் பமைப்புப் பற்றி
மெய்யுரை செய்தேன்; அன்னோன்
வியந்துனைக் காண நேரிற்
மெய்ப்பணி யாளர் தம்மை
விடுத்தனன்; அவர்க ளோடு
அரண்மனை சென்றீ ராறல்
அரசனிச் சிலம்பு செய்த
நிரையினைப் பார்ப்பான்; நேர்த்தி
நிலைபெறும் நிலையைக் கண்டு
உரியதாம் பொன்னை உள்ளத்
துவகையோ டந்தே மேலாம்
வரிசையும் செய்தே மேலும்
வாழ்த்துவான் கவலை தீர்க.

கோவ : என்பொருட் டிதனைச் செய்த
எழிலமை உனக்கென் வாழ்த்து!
அன்பினை ஆயுள் மட்டும்
அகத்தினில் ஏற்றி வைப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இவ்வேளை வெளியே நின்ற
காவலர் இருவர் தமக்குள் பேசுதல்]

1-ம் காவ : இங்குநீ வருக நண்ப!

2-ம் காவ : ஏனழைத் தாய்நீ நண்பா!

1-ம் காவ : அங்குநீ கவனித் துப்பார்
அம்மனி தன்மு கத்தில்
பொங்கிடும் பொலிவைப் பார்நீ
புன்மையே இல்லா மேன்மை
தங்கிய தகுந்த பண்புச்
சால்பையும் அறிவாய் நண்பா!

2-ம் காவ : உன்மொழி உண்மை! உண்மை!
ஒருபிழை கூட இல்லை.
அன்பகம் அலரும் பண்பே
ஆட்சிசெய் வதனம் யார்க்கும்
துன்பையே செய்யாத் தூய்மை
சுடர்விடும் உருவம் ஆகா;
பொன்பொதி சிலம்பைக் கொண்ட
புன்மையன் இவனும் என்றே
சொன்னவவ் வஞ்சி ஏதோ
சூழ்ச்சியைச் செய்கி ருளு?
பன்னரும் அமைதிப் பண்பு
பல்கிய பழைமை நேர்மை
துன்னிய சுகுணன் போலும்
தூயதன் மரபுக் கான
நன்னிலை பிறழு வானு?
நானிதை நம்ப மாட்டேன்.

1-ம் காவ : எட்டுணை யேனும் ஐயம்
இல்லையுன் வார்த்தை தன்னில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2-ம் காவ : துட்டனும் வஞ்சி சொல்லால்
சூழ்ச்சியின் வாயிற் பட்டு
எட்டுணை தானும் மன்னர்
எண்ணமே கொள்ளா திங்கே
மட்டிலாக் கொடுமை சூழ
வாய்ப்பினை ஆக்கி னாரோ?

1-ம் காவ : உயரிய மன்ன ருக்கே
உண்மையைத் திரித்துக் கூறி
செயிரினைச் செய்யச் சூழ்ச்சி
செய்துளன் வஞ்சி இங்கே ...

2-ம் காவ : வஞ்சியின் வஞ்சங் கொண்டால்
மன்னனைப் பழியே சாரும்;
அஞ்சிடாத் தீயோன் இந்த
அற்பனும் வஞ்சி யாமே!

1-ம் காவ : பேசுதல் வேண்டாம் வஞ்சி
பெரும்பழி எமக்குஞ் செய்வான்;
காசினி மீது நாம்கொள்
கடமையே பெரிதாம் நண்பா!

[வஞ்சி அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே வருதல்]

வஞ்சி : உருவினைக் கொண்டே நீவிர்
உளத்தினை அளக்க இங்கே
கருதிடல் வேண்டா மையா!
கயவர்கள் எல்லா ரும்புன்
னுருவினைக் கொண்டா ரல்ல
னுணர்ச்சியை அடக்கித் தெய்வ
உருவெனப் புகலும் வண்ணம்
ஒளிருதல் உலகில் உண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவினைக் கண்டே உண்மை
உரைத்திடல் முடியா, தையா!
இவன்பெரும் திருடன் உள்ளம்
இருண்டவன்; இடர்கள் தம்மை
புவனியிற் செய்வ தற்கே
பூத்தவன் கொடியன், இங்கே
கவனமாய் இருக்க வேண்டும்.
காவலர் நீவி ரென்றால்
அவன்விழித் திடுவான் அப்பால்
அகன்றிட முயல்வான் நாளை
மன்னனின் தண்ட னைக்கும்
மாஉயிர் போதல் கூடும்.
என்னுரை தனிலே இங்கே
எள்ளள வேனும் வஞ்சம்
இல்லையாம்; உண்மை இங்கே
ஏந்தலின் பணியைச் செய்ய
வல்லநீர் வீணாய் வாதம்
புரிந்திடல் தீதே யாகும்.
மண்டலம் தனிலே இந்த
மாதிரி மனிதர் தம்மைக்
கண்டதும் கருத்தைக் காட்டிக்
கடமையிற் றவற வேண்டாம்.
தீயவன் இவனைத் தேடித்
திரிந்துநான் அலுத்தே யப்பால்
பேயனாய் நடித்துப் பேசிப்
பெரும்பல பாடு பட்டே
அறிந்துளேன். என்மு யற்சிக்
கானதாம் பலனைப் போக்கச்
சிறுமதி யாலே நீவிர்
செய்வினை தவறி டாதீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1-ம் காவ : சரிசரி எமக்கே என்று
தனித்துள முடிவு உண்டா?
தரணியை ஆள்வோன் ஆணை
தவறுதல் அழகும் அல்ல.

2-காவ : கருத்துகள் கூறிக் காலம்
கழித்திடல் கடமை யாமோ?
திருத்தமாய் மன்னன் எம்பால்
செப்பிய கடமை தன்னை
விருப்புடன் செய்தல் ஒன்றே
மேலதாம் நண்பா வாநீ.

வஞ்சி: பொருத்தமாய்க் கதைகள் சொன்னீர்;
புவனியில் உம்பால் மன்னன்
உரைத்துள பணியைச் செய்தே
உயரலாம். அன்றி, இங்கே
மறுத்துள ராகில் வீணே
மடிவுதான் அடைவீர். ஆனால்
ஒருத்தனைக் கண்ட போதே
உடனடி முடிவு கொள்ள
விருப்பினைக் கொள்ளா தீர்நீர்;
மேன்மையே அல்ல. ஓர்நாள்
ஒருவனைக் கண்டே நானும்
உருவொடு அவன்சொல் பொய்ம்மை
உரையினில் மயங்கி விட்டேன்.
உலுத்தனே பொல்லாத் தீயன்
ஊரிலே அவன்செய் குற்றம்
உரையினில் அடங்கா தாகும்.
சீரிலா னாலே நானே
சிறுமைகள் உற்றேன். இந்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருடனும் அவனை யொப்பான்.
செப்பிடும் கதைக ளாலே
மயங்கிட வேண்டாம் நாளை
வருந்துயர் தன்னை உன்னி
உயர்ந்தநம் மன்னன் இட்ட
உறுபணி செய்தே உய்க.

1-ம் காவ : அரசரின் பணியைக் கொள்வோம்
அன்பநீ வருக சேர்ந்தே.

[இருவரும் கோவலன் இருக்குமிடத்தை அடைதல்]

2-ம் காவ : அரசியின் சிலம்பைக் கொண்ட
அற்பனே அதனை விற்றுப்
பெருநிதி கொள்வ தற்குப்
பெயர்ந்தும்நீ வந்தா யோடா?

கோவல : திருடனுக நாஞ? என்ன
செப்பினை செய்த தென்ன?
நிரையிலா வார்த்தை கூறி
நெஞ்சினைச் சுடவந் தாயோ?

1-ம் காவ : உரையினில் வல்லோன் நீயென்
றுணர்ந்துளோம் ஆகை யாலே
உரையினுல் எமையே மாற்ற
உலுத்தனே முயல வேண்டாம்.

கோவலன் இசைப்பாட்டு

திருடன்என் ஞேவெனைச் செப்புநீர்-சீலச்
சிந்தையுள் ளார்குலம் பூத்தவன் தானே
- எனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சுடு சொல்லால் இதயமே தீய
எண்ணரும் துயரம் பெருகுது தேவா !!
இச்சக வாழ்வில் இவ்வித நேர
ஏதுதான் என்ன இயம்பிடு வீரே!
(திருடன்)

காலமெல் லாமுயர் காரியஞ் செய்தே
கண்ணியம் புண்ணியம் கதுவிய என்னை
ஞாலமீ திவர்கள் திருடனென் றிங்கே
நவிலுதல் அழகோ? நாதனே தேரேன்
(திருடன்)

1-ம் காவ : திருடருட் சமர்த்தன் நீயே
தேர்ந்தவுன் நடிப்பா லெம்மைக்
குருடராய் ஆக்கி ஓடும்
குறியினைக் கொள்கின் றுயோ?
கையிலே சிலம்பும் உண்டு
காரணம் வேரு வேண்டும்?
பொய்யனே! புலம்பித் தேம்பிப்
போய்விட முயலா தேநீ.

கோவ : கையினில் உள்ள தான
கவின்மணிச் சிலம்பு காதல்
பொய்யிடை யாளின் பாதம்
பொலிந்துள தையா! இங்கே
மெய்யினைத் தவிர என்வாய்
வெறும்மொழி புகல்வ தில்லை.
துய்யவென் சோழ நாட்டில்
தூய்மையே உயிராம் என்றும்.

2-ம் காவ : கதையில்நீ சமர்த்தன் என்று
காட்டிட வேண்டாம் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவழி காண நீயும்
புத்தியைக் கூராக் காதே!
எதுவித பயனு மில்லை
எமனையும் வெற்றி காணும்
மதியெமக் குளதாம்; வார்த்தை
வாதினால் வெல்ல மாட்டாய்.

**வஞ்சி :** ஐயநீ சொல்லும் சொல்லில்
ஐயமே இல்லை இந்தப்
பொய்யனே சமர்த்தன்; புத்திப்
பொலிவினால் தப்பி ஓடி
உய்திட முயல்கின் றானும்
உரையினைச் செவிகொள் ளாது
செய்யநம் மன்னன் இட்ட
சீரிய கடனைச் செய்வீர்.

**கோவ :** துட்டனே என்ன சொன்னாய்?
தூமணிச் சிலம்பை விற்க
இட்டமாய்க் கதைகள் செப்பி
எனையுமே மாற்றி இப்போ
மட்டரும் சூழ்ச்சி செய்து
மடக்கினை போலும். ஐயோ
கட்டிய மனையாள் காலின்
கவின்மணிச் சிலம்புக் காகப்
பொன்னையே பெறவந் தோனைப்
பொய்யனாய் ஆக்கி னாயோ?
உய்யநீ மாட்டாய் இந்த
உலகினில் அறங்கள் ஓர்நாள்
பொய்யனே உன்றன் வாழ்வைப்
போக்கிடும். புனிதர் நெஞ்சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வமே இதனைச் செய்யும்
செகத்தினில் அறிவாய் நானே.

[இவ்வேளை காவலாளர் குறுக்கிடல்]

1ம் காவ: காலமிங் கழிந்து தேய
கடுமிருள் கப்பு கின்ற
மாலையோ நெருங்கு தன்ப!
மன்னவன் பணியைச் செய்யத்
திருடனைப் பிடித்துச் செல்வோம்
சென்னியை அங்கே கொய்வோம்.

2ம் காவ: நடவடா வஞ்சகக் கள்வா
நான்மணிக் கூடல் நீதி
கடந்தவுன் சிரத்தை வெட்டும்
கடமையைச் செய்ய வேண்டும்.

கோவ: கொடியமா விதியே இங்குன்
கூத்தினை விலக்கு வேனோ?

[காவலாளர் கோவலனை இழுத்துச் செல்லல்]

—திரை—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 5

இடம்: கொலைக்களம்

பாத்திரங்கள்: கோவலன்—காவலரிருவர்

1ம் காவ: வெட்டுமுன் இந்த நாட்டு
விதிமுறைக் கமைய உன்றன்
இட்டதெய் வத்தை ஏத்தி
இறைஞ்சுக சிறிது நேரம்.

கோவ: ஐய நான் திருட னல்ல
அறத்தினை அணுவும் தப்பாச்
செய்யசீர் மரபில் பூத்த
சிறப்பெனக் குண்டாம்; அந்த
பொய்யனும் பொற்கொல் லன்றன்
புன்மொழி கேட்டே உங்கள்
வையக மன்னன் நீதி
வழுவினன் அறிகு வீரே?

2ம் காவ: வேந்தனைப் பழிக்கின் றுயா?
மெய்ம்மையே இல்லா மூடா!
ஆய்ந்துயர் அறிவி னூடே
ஆட்சிசெய் கின்றுன்; எங்கள்
வேந்தனின் மகிஷி காலில்
விளங்குமா சிலம்போ டுள்ளாய்
கண்ணினுற் கண்ட காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறையிலாச் சாட்சி யன்றே
மண்ணிதில் திருடர் எல்லாம்
மரணமே கொள்ளல் என்னும்
திண்ணிய விதிக்கே ஒப்ப
சிரத்தினைத் துணித்தல் நீதி
கண்ணிய மில்லாப் புன்மைக்
கதைகளை பேசா தேநீ !

கோவ: வேந்தனைப் பழித்தால் முன்னை
வினைப்பயன் தீரு மாமோ?
வேந்தனின் வாயில் வந்து
விதிசதி செய்யு மானல்
ஆய்ந்தறி வுள்ளோன் கூட
அழிவுறல் வேண்டும் அன்றே !
இந்நிலை என்னைச் சேர
இருவினைப் பயன் தல்ல
இன்னலை என்னை ஏற்ற
எழிலன்மை கண்ணை கிக்கு
முன்னர்நான் செய்தேன்; அத்தீ
மூண்டெழுக் தெரியு தாமோ?
நல்லவள் துயரில் வீழ
நான்சுகம் கொள்ளும் பொல்லாப்
புல்லனய் வாழ்ந்தேன்; சீரார்
புவனியில் எனக்கே இந்த
தீமைதான் நேர வேண்டும்.
சிறுமதி கொண்ட பேர்கள்
ஏமமே கொண்டு தாழ்தல்
இறைவனின் "நியதி, ஆனல்
திருடனும் பட்டம் தாங்கி
தேசமே இகழ எந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமமும் புரிய வில்லை.
காலமே பதில்நீ கூறுய் !
எத்தனை துயர மென்னை
இங்கு சூழ்ந் திருக்கிற்றுனல்
இத்தரை மீது தாங்கும்
இதயமிங் கெனக்குண் டந்தோ
நித்தமும் திருடன் என்ற
நிலைபெயர் அழியு மாமோ?
சத்திய மறியார் வஞ்சச்
சதியினுல் கேடு சூழ்ந்தோர்
வாழுவ தாமோ? இல்லை
வானவர் தாழ்த்து வார்கள் !
என்குலச் சிறப்புக் கிந்த
இழிநிலை அடுக்கு மாமோ?
வன்கொடும் பழியை வைத்து
மறைகிறேன்; உயிரே யன்ன
கண்ணகி! கற்பின் செல்வி
கலங்குவாய்! நாதி யற்ற
பெண்ணவ ளாகி நீயும்
பெருந்துயர் அடைவாய்; அந்தோ
உன்னரும் சிலம்பை விற்கும்
உளத்துடன் வந்தேன்; இங்கே
என்னையே திருட னுக்கி
இழிகொலை செய்தார் தீய
மன்னனும் பாண்டி யன்றன்
வரன்முறை நீதி நீக்கி
புன்மதி வஞ்சி சொன்ன
பொய்யுரை மதித்தான்; நீயோ
என்னுயர் நிலையை இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருமே அறியச் செய்க!
மதுரையில் நீதி யில்லை;
மறமமை ஆட்சி ஓங்கி
சதிசெயும் நிலையைக் காட்டி
தரணியில் உண்மை செய்வாய்.
பாண்டிய நாடு வந்து
பாங்குற வாழ உன்கால்
பூண்டுள சிலம்பை விற்று
பொருள்கொள முனைந்த என்னை
ஈண்டுபுன் மதியார் பொல்லா
இழிவுறு திருட னாக்கி
தாண்டினர் நீதி தன்னை;
தகவுறு கற்பி னாலே
நீதியை நிலைக்க வைத்து
நித்திய உண்மை காட்டாய்!

2ம் காவ: வேண்டுதல் செய்ய உன்னை
விடுத்தனம் ஆனால் எங்கள்
பாண்டிய மன்னர் தன்னை
பழித்திழி வினையே செய்தாய் . . .

1ம் காவ: புல்லனே புலம்பிக் காலம்
போக்குவான் பகலும் செல்ல;
அல்லது சூழும் வேளை
அண்மிய தாகை யாலே
துட்டனும் இவன்சி ரத்தை
தூயநம் வேந்தன் ஆணை
தட்டிடா வாறு வெட்டி
தகவுறு மனைக்குச் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காவலர் வெட்டுவதற்கு ஆயத்தஞ் செய்தல்)

கோவ : கண்ணகி கற்பின் செல்வி !
கயவர்கள் காட்ட நீதி
எண்ணவே இல்லை யம்மா.
இழிந்தவர் நாளை உண்மை
வண்ணமே அறியச் செய்து
மாண்புறு குலத்தின் சீரை
மண்ணிடை நிலைக்க வைத்தல்
மங்கைநின் கடனே யாகும்.

(தலையை வெட்டுதல்)

— திரை —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 6

இடம் : ஆயர்பாடி

பாத்திரங்கள்: கண்ணகி — மாதரி — ஏனைய இடைச்சியர் மூவர்

குரவைக் கூத்து

கார்முகில் வண்ணனே காசினி மீதெமைக்
காத்திட வந்து பிறந்தவனே
சீர்மலி தேவகி இல்லம் விடுத்தன்று
தேடியே வந்ததை நாம் மறவோம்

ஆனிரை மேய்ப்ப னேயெமக் கானநல்
அன்பினைத் தந்தருள் செய்பவனே
மானிலம் வாழ்ந்திடும் மக்கள்குலம்பல
வண்மை பெறவே வரந்தருவாய்.

கோவலர் நற்குடி காத்தவனே உயர்
கோவர்த்தன கிரி கொண்டவனே
பூவொடு விண்ணைப் புரப்பவனே அருட்
பூரணனே எங்கள் நாரணனே.

நாடு வளங்களைக் கண்டிடவே அறம்
நாலு திசையும் வளர்ந்திடவே
தேடும் எமக்கருள் செய்திடு வாய்பல
சீர்கள் மலர வழிவகுப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 இடை: ஆட்டமே வேண்டாம் எங்கும்
அமங்கலச் சகுனம் கண்டேன்
நாட்டினில் நம்ம வர்க்கு
நலிவுகள் நிகழும் போலும்
பாலதிற் புரையை யிட்டுப்
பகலெலாம் வைத்தேன் அந்தப்
பாலது தோய வில்லை
பழியது சூழும் போலும் ...

2 இடை: உலைமிசை வைத்த வெண்ணை
உருகவே இல்லை வீட்டில்
எருத்துடன் பசுக்கள் யாவும்
இடைவிடா தரற்றக் கண்டேன்.

3 இடை: கன்றுடன் பசுவைக் கட்டும்
கயிறுக ளனைத்தும் இற்றே
அறுந்தன, இதுபோல் முன்பிங்
கானதை அறியேன் நானே

1 இடை: சோதனை யாமோ? தேவர்
சூழ்ச்சியோ! தெரியேன் இந்தப்
பூதலம் மீது பொல்லா
புன்மையே சூழும் ஆமோ?

(மதுரை சென்ற மாதரி பதட்டத்துடன் அங்கு வருகிறாள்)

மாதரி: காவலர் மனைவி காலின்
கவின் மணிச் சிலம்பி லொன்றைக்
கோவலர் திருடி னராம்
குற்றமே சுமத்தப் பட்டார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவினைப் புரக்கும் மன்னன்
பொங்கிய சினத்தி னாலே
கோவலர் தன்னைக் கொல்ல
கொலைஞரை ஏவி னாராம்;
மாலையில் கொலையே உண்டு
மாண்டனர், இந்தச் செய்தி
மதுரையில் ஒலித்த தின்று.
ஞாலமீ தின்று தோன்றும்
நலமிலாச் சகுனம் நாட்டின்
கோலமே குலைய வைக்கும்
குறியினைக் கொண்ட தாமோ?

1 இடை: கோவலர் தனையா கொன்றார்?
குற்றமே இல்லாப் பண்பு
மேவிய வதனம் கொண்டோர்;
விருப்புடன் பேச வல்லார்
பார்வையில் சாது அன்பு
பரிமளித் துள்ள மேலாம்
சீர்மையர்; திருட்டைச் செய்யும்
தீங்குளார் அல்லர்; சீலச்
செவ்வியார் குலத்தில் வந்தோர்
பாங்கிலா வாறு செல்லும்
பண்பிலர் அல்லர்; அந்தோ

மாதரி: விதிசெயும் விளையாட் டெல்லாம்
விளங்குவார் எவரும் இல்லை!
அதிசய மான செய்கை
அவனியில் நடத்தல் சாலும்;
மதுரையில் சோகக் கங்குல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தது போல எங்கும்
கதுவிய அமைதி கண்டேன்
கடவுளே இந்தத் துன்பக்
கடலினைக் கடந்து செல்லும்
திடமெமக் கீவார் சேர்ந்து
செப்பமாய்த் தொழுகை செய்வோம்

1 இடை: கண்ணகி அறிந்தா ளானல்
கவலையாம் தீயில் வாடி
வெண்ணெயாய் உருகு வாளே;
வேதனை அவளான் மாவை
மண்ணிடை நீங்கச் செய்யும்
மறுவிலாக் குணத்தி, பாவம்
எண்ணிய எண்ணம் எல்லாம்
இன்றுடன் தொலைய நின்ருள்

மாதரி: பாவம் அப் பாவை பொல்லாப்
பாண்டியர் செயல்கள் அந்த
பாவையின் காதில் சற்றும்
பற்றிடா வண்ணம் இங்கே
அமைதியோ டிருக்க வேண்டும்
அன்னவள் அறிந்தா ளானல்
அழிவுதான் ஆகும்; எங்கள்
முன்னவன் தன்னை ஏற்றி
முறைப்படி தொழுவோம் வாரீர்!

(கண்ணகி வருதல்)

கண்: என்னநீர் கூட்ட மாக
இங்குநின் றுரைசெய் கின்றீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நீர் கண்ட பின்னே
ஏன்கதை யாது நின்றீர்
காரணம் எதுவோ? சற்றுக்
கழறுக . என்ன .. என்ன ?
பூரண மௌனம் இங்கே
பொருந்துவ தேனோ கூறீர் ..... ....

காலையிற் சிலம்பி னோடு
கவினுறு மதுரை சென்ற
கோலமார் என்றன் அன்புக்
கொழுநனைக் காணேன் பொல்லா
மாலையும் ஆயிற் றின்னும்
வருதலைக் கண்டி ராமோ?
பூரண கும்பம் தானாய்
புரண்டது மண்ணில்; என்ன
காரணம் இதுவோ? தேரேன்
காதலர் தன்னை இந்த
ஊரதிற் கண்டார் உண்டோ?
உரைக்குக எனது நெஞ்சிற்
பேரிடர் சூழ்ந்த தம்மா
பெருகுது கண்ணீர் ஆறாய் ................

பதியவர் மதுரை யென்ற
பதிக்குமே ஏகும் காலை
விதியதன் செயலைப் போல
விடையது குறுக்கே பாய்ந்து
ஓடுதல் கண்டேன்; ஏதும்
ஊறவர்க் காயிற் றாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிய வதனத் தோடேன்
மௌனமாய் நிற்கின் றீர்கள் ..... ?

சொல்லுக! ஏதும் சூது
சூழ்ந்ததோ? நீவிர் எல்லாம்
நல்லவர் அல்லீ ராமோ?
நடுங்குதென் நெஞ்சம் கூறீர் !

மாதிரி! மதுரை செல்லும்
வழக்கமே உடையாய் ஆங்கு
தீதெதும் என்ப திக்கு
நேர்ந்ததோ செப்பு வாயே ....

பேசிடாப் பாவை யாகி
பித்துடன் நிற்கின் றுயா?
ஆசுளம் கொண்டா யாமோ?
அறிவுடை யாள்நீ நன்கு
பேசிடும் பெற்றி யுள்ளாய்;
பேசவேன் தயங்கு கின்றுய்?
அனைவரும் மௌன மாகி
அடங்கியே விட்டீ ராமோ?
சினத்தினுற் பொங்கிச் சீறும்
சிறுவிழித் தீயி னுலே
இனத்தையே அழிப்பேன் யாவும்
எடுத்துநீர் கூற வேண்டும்.

மாதரி : அம்மவுன் முகத்தைப் பார்த்தால்
அவனியை அளிக்கும் காளி
அம்மையாய் உள்ளா யற்ப
அடியவள் தவறை அன்பால்
பொறுக்கவே வேண்டும் தாயே!
பொலிவுடை உன்றன் நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புடைச் சீர்மை யாளன்
சிலம்பினை விற்கச் சென்ருன் ....
அறத்திலே திறம்பி நின்ற
அற்பனும் வஞ்சி என்பான்
திறத்திஞல் பொய்யைச் சொல்லிச்
சீர்மிகு அரசன் நெஞ்சில்
புகுத்திய நஞ்சி னுலே
புரவலன் தனது ராணி
காலிஞேர் சிலம்பை உன்றன்
கணவனே கவர்ந்தா னென்று
மாலையில் கொலையே செய்ய
வழங்கினன் ஆணை; கெட்ட
கொலைஞரும் களத்தின் கண்ணே
கோவலர் தன்னைக் கொன்ருர்
நிலையினை உணர்ந்த எங்கள்
நெஞ்சமே நடுங்கிற் றம்மா ....

கண்ணா : அருட்டிறன் அனைத்தும் கொண்ட
அன்பரா இந்த நாட்டில்
திருட்டினைச் செய்தார்; அந்தோ
தீவினை எம்மை என்றும்
நெருக்கியே நிற்குதையோ!
நீசரால் என்றன் நாதன்
இருநிலத் தில்லா ராஞர்
இதுதகும் செயல தாமோ?

(கண்ணகி மயங்கி விழுதல்)

(எழுந்தபோது சினம் பொங்கிய நிலையில் பார்க்கிருள். கூடியிருந்தவர்கள் பயந்து மறைந்து விட்டனர்......... கண்ணகி கோப வெறியுடன் ஒடுகிருள்.)

— திரை —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 7

இடம்: வீதி

பாத்திரம்: கண்ணகி மாத்திரம்

(செங்கதிரும் அட்டதிக்குப் பாலகரும் அசரீரியாகப் பேசுகின்றனர்.)

கண்ணகி: அட்டதிக்கும் கூடியென்றும்
ஆட்சி செய்யும் பாலகார்!
அறிந்து நீரும் இங்குநீதி
அறைய வேண்டும் முறையதாய்;
துட்டராளும் இந்த நாட்டில்
தூய பண்பு கொண்டவர்
தொலைந்துவானை யடைதல் நீதி
ஆகுமோ நீர் அறைகுவீர்!

வட்டமாக வானில் வந்து
வயங்கி நிற்கும் பரிதியே!
மண்ணில் நீதி மறைவுகொள்ள
விளைந்த சூது யாதென?
திட்டமாக இங்கு நீயும்
செப்புவாய் நீ உண்மையை!

கையினிற் துணையாய்க் கொண்ட
காதலி சிலம்பைக் கொண்டு
வெய்யதீ வினையால் வந்த
வேதனை நீக்கச் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துய்யஎன் கணவன் வாழ்வு
தொலைவுற லாமோ? இங்கு
பொய்யரின் சூழ்ச்சி யாலே
புன்மைகொள் திருட ஞகி
கொலைக்களம் பட்டார் இந்தக்
கொடுமையைக் கண்டீர்; நீவிர்
நீதியை நெஞ்சில் வைத்தே
உலகினில் உயர்ந்தா ரன்ருே!
உத்தமர் என்றன் நாதன்
அலகிலாச் சோதி யான
ஆதவா! நீ சொல் முன்னே ....

செங் : உண்மையை உயிராய்க் கொள்ளும்
உத்தம உன்றன் நாதன்
வண்மையிற் சிறந்தோன்; வஞ்சம்
மருவிடாப் பண்பே கொண்டோன்;
திருடனே அல்லன்; தீமை
சிறிதுமே செய்தோ னல்லன்
மருளையே கொண்ட இந்த
மதுரையை அழிப்பாய் அம்மா!

கண்ணகி: அட்டமா திக்கும் ஆட்சி
அமைவுறச் செய்ய வல்லீர்!
கட்டிய என்றன் அன்புக்
கணவனும் கள்வ ஞமோ? ....
திட்டமாய் இங்கு நீவிர்
செப்புக! சிறுமை கொண்ட
துட்டரைத் தொலைத்து நீதி
துலங்கிடச் செய்வ தற்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டதி 1: இல்லையுன் கணவன் கள்வன்
இல்லையீ தறிக நீயும்

அட்ட 2: நல்லவன் உன்றன் நாதன்!
நஞ்சிலா நெஞ்சம் உள்ளோன்

அட்ட. 3: புல்லர்கள் நீதி தன்னை
பொண்றவே செய்தார் அம்மா!

அட்ட. 4: வல்லநீ இந்த நாட்டில்
வாகுறு தீயை மூட்டாய்!

அட்ட. 5: கற்பினில் உயர்ந்த செல்வி
கட்டிய கணவன் சீலன்

அட்ட. 6: பொற்பமை குணத்தோன் மேன்மை
பொருந்தியோன் உனது நாதன்

அட்ட. 7: அற்பரால் அழிவு கொண்டான்
அறிகுவாய் அம்மா நீயே.

அட்ட. 8: நற்புலம் கொண்டோய்! இந்த
நாட்டை நீ அழித்தல் வேண்டும்.

கண்: செங்கதிர் சொன்னன் முன்பு;
திக்கினைக் காக்கும் பாலர்
இங்கெனக் குண்மை ஈந்தார்
இந்நகர் அழிப்பேன்; முன்னல்
பொங்கிய அன்பு காட்டிப்
புரந்தவென் பதியைப் பார்த்தே
அங்குமிவ் வுண்மை ஆய்ந்தே
அப்புறம் அழிவு செய்வேன்.

—திரை—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 8

இடம் : கொலைக்களம்

பாத்திரங்கள்: கண்ணகி+கோவலன் உடல்

இசைப்பாடல்

**கண்ணகி**

நீதி யழிந்ததையா என்றன்
நெஞ்சம் குலைந்த தையா !
ஆதி ஒளிவடிவே—எனக்
காறுதல்யார் சொல்வா ரையா?
அன்பர் சிலம்பு கொண்டே—இந்த
அணிநகர்க்கே வந்ததனுல்
துன்பம் படர்ந்ததையா—இங்கு
சூழ்ச்சி பலித்த தையா
உண்மை அழிந்து விட்டால்—உன்றன்
உயர்வும் ஒழிந் திடுமோ
வண்மை தரும் இறையே—இதை
மாற்ற வழி யிலையோ?

(கண்ணகி கொலைக்களம் அடைதல்)

கண் : அன்பினுல் அறிவால் மூத்தீர்
அறவழி மறவாப் பண்பின்
இன்பமும் இலங்க நின்றீர்;
இம்முடி வுமக்க தாமோ?
துன்பெனும் கடலில் சோகத்
துரும்பெனச் சுழன்றீ ரையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதி நீயே அந்தோ
இதுதகு முறையோ ஐயோ!
இன்புறு தலைவ! பண்பின்
ஏற்றமார் குலத்தில் தோன்றி
பொன்பொலி வாழ்வு கொண்டு
பொன்றிடா தறத்தில் என்றும்
உன்புகழ் இலங்க வைத்தாய்;
ஊறுனக் உண்டா யிற்றே?
துன்பெனும் வெயிலில் இங்கே
துடிக்கிறேன்; புழுவாய் நாதா
பேறுகொள் உன்னை இந்த
பெட்பிலார் திருடன் என்று
கூறவும் காலம் ஆச்சோ?
கொலையினால் உன்னைப் போக்கி
மாறமை செயலைச் செய்த
வன்கணூர் வாழு வாரோ?
தேறவே முடியா தையா!
தெய்வமே ஆனாய் நீயே!
சிலம்பினை விற்றுப் பொன்னைத்
தேடுக என்று சொன்னேன்;
புலம்பியே வாட நீயும்
பொன்றினை; ஆமோ நாதா
நலம்பல கொண்டு வாழ்ந்தாய்
நாதியே அற்றுப் பொல்லா
தலம்புகுந் திழிவு தாங்கிச்
சாகவும் விதிய தாச்சோ!
உரையினால் என்றன் உள்ளம்
ஊறிடும் துன்ப ஆற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைசெய முடிய வில்லை;
வாகுறு பதியே தேற்றிக்
கரையுற வழியை நீயும்
காட்டுவை; ஆமோ அந்தோ!
தரையினில் இட்ட மீனாய்
தனித்துநான் துடிக் கின்றேனே ....
தேசொளிர் வதனங் கொண்ட
தெய்வமே! என்னை ஏற்றுக்
காசினி மீதில் அன்புக்
காதலி யாக்கி இன்று
பேசிடா வகையாய் ஆனாய்
பெண்ணிவள் தனித்து நின்று
மாசுறு நாட்டில் வாழ
மனமுமக் காச்சோ? அந்தோ!
தேசொளிர் வதனம் இன்று
திருடனும் பட்டங் கொண்டு
கூசிய தாமோ? பொல்லாக்
கோலையினால் உடலம் போக
தூசினில் தூய்மை யான
சுந்தர உடலம் வீழ
பேசவும் மறந்தீர்; முன்னர்
பெருங்கவி வாணர் போற்றப்
பேசிய வாய்தான் எங்கே?
பிணமென ஆனீ ரந்தோ?
ஈசனே! இதுவா இங்கே
ஏற்றது? நீதி மாறி
மாசுநாம் செய்தோ மல்லோம்;
வண்டமிழ் நாதன் அன்பாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசவே செய்வாய் உண்மை
பிறங்கிடக் காட்டு தற்கே !

(கோவலன் உடல் வாய் திறத்தல்)

கோவல: கண்ணகி கற்பின் மிக்க
கனலென ஆன தூய்மைப்
பெண்ணெனப் பெருமை கொண்டோய்!
பெருநில மன்னன் நீதித்
திண்மையைத் தீய்த்தே என்னைத்
திருடனாய் ஆக்கிக் கொன்றான்.
உண்மையை, உலகிற் கேநீ
உணர்த்துக நம்கு லத்தின்
சீரினை யெல்லாம் நல்ல
செப்பமாய் பரந்தே யுள்ள
பாரகம் அறியச் செய்தல்
பத்தினி கடன தாமே!

கண்: அன்பரே அதனைச் செய்வேன்
அறந்திறம் பாத உம்மைத்
துன்பினில் துடிக்க வைத்தோர்
துடிக்கவும் அறத்தை நாட்டி
மன்பதை உம்மை நாளை
மதிக்கவும் பாண்டி நாட்டுப்
புன்பிறப் பாள ரெல்லாம்
பொன்றவும் செய்வேன்; அப்பால்
மண்ணிடை வாழ்வை நீத்து
வானகம் வந்தே சீலப்
புண்ணிய உன்பொற் பாதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவினில் பொருந்தி நிற்பேன்
விண்ணவர் மதிப்பர், உன்னை
மேவிய பழியும் நீங்கும்.
திண்ணிய உண்மை உள்ளச்
சீலனும் என்றே உன்னைப்
புண்ணியர் போற்று வார்கள்
புவனியின் சரித்தி ரத்தில்
கண்ணியப் பெருமை கொண்டு
கவினுற நிலைப்பாய் நீயே.

—திரை —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 9

இடம்: பாண்டியன் அரண்மனை

பாத்தி: கண்ணகி + பாண்டிய மன்னன் + பட்டமகிஷி + காவலாளர் + சபையினர்.

குறிப்பு; சினத்துடன் கையிற் சிலம் பொன்றை ஏந்திக் கண்ணிற் கனல் பொங்கக் கண்ணகி வருகிருள்.

கண்ணகி :

நீதியில்லா அரண்மனையைக் காவல் செய்து
நிற்கின்ற காவலனே! உள்ளே ஏகி
மாதொருத்தி மணிச்சிலம்பைக் கையில் ஏந்தி
மன்னவையில் நீதிபெற வந்தா ளென்று
தீதுடைய கொடுங்கோலைத் தாங்கி நிற்கும்
சிறுமதியன் உன்னரசன் முன்னே சென்று
ஓதிடுவாய்! உடனேஉட் செல்லா விட்டால்
உனையென்றன் விழித்தீயால் அழிப்பேன், ஓடு!

[ காவற்காரன் அச்சத்துடன் உட் செல்லல் ]

காவலாளி :

மன்னவரே நின்கொற்றம் வாழி! வாழி!
மதிக்குலத்து மாண்பெல்லாம் வாழி! வாழி!
பொன்னமைந்த சிலம்பொன்றைக் கையில் ஏந்தி
பொங்கியழல் விழிமூள பொருமிச் சீறி
நின்னெழிலார் மனைவாசற் படியின் கண்ணே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்காண நிற்கின்றாள் பெண்ணொருத்தி
இந்நிலத்தை அழிக்கவந்த காளி போன்ற
இயல்புடையாள் அச்சத்தால் ஓடி வந்தேன்.

பாண்டி:
பார்ப்பதற்கு பத்திரமா காளி யென்றால்
பயந்துவிட லாமாடா மூடா நீயும்
பார்புகழும் பாண்டியனின் காவ லாளன்
பயந்துவிட்டேன் எனப்பகர்தல் வெட்க மன்றோ.
யார்அந்தப் பெண்என்றும் இங்கே அன்னாள்
ஏன்வந்தாள் என்றும்நீ அறித லற்று
பேர்நடுக்கம் உற்றவனாய்ப் பிதற்று கின்றாய்
பேடியங்கே ஓடியுடன் அழைத்து வாடா!

கண்:
யாரெனவே அறிவதற்கு அழைப்பு வேண்டாம்
யானேநின் அவைதேடி வந்து விட்டேன்.

பாண்டி:
அழைப்பின்றி அறநீதி அழிய இங்கே
அடங்காமல் வந்துள்ள பெண்ணே நீ யார்?

கண்:
பிழைப்புண்ட நீதியிலாச் சபையார்க் கெங்கும்
பெருமையுண்டோ? அதனாலே அழைப்பு வேண்டாம்

பாண்டி:
பிழைப்புண்ட தாவென்றன் நீதி? என்ன
பித்துற்று பேசுகிறாய்? பாண்டி நாட்டின்
வழக்கிற்றே மாறாக உட்பு குந்து
வாயாடித் தனமாக வார்த்தை சொன்னாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கத்தில் பண்பில்லை சபையிற் பேசும்
பாங்குடைய நெறிகளையும் படித்தா யில்லை
ஆங்காரங் கொண்டவளே அரச நீதி
அறியாத தற்குறியா அடங்கிப் பேசு!

**கண்:**

பாங்கார்ந்த நீதிநெறி அறிவேன் மன்னு!
பாரதிலே சீர்பார்த்துத் தீர்ப்பைக் கூற
ஈங்குனக்கு முடியவில்லை இறைவ னுக்கே
என்றைக்கும் ஆகாத செயலைச் செய்தாய்

**பாண்டி:**

ஆங்கார வார்த்தைகளை அடுத்த டுத்தே
அறைகின்ற அரிவையும்நீ அரசர்க் கீயும்
பாங்கார்ந்த மதிப்பனையே கொடுக்க வல்ல
பக்குவத்தைத் தெரியாத மூடி யாமோ?

**கண்:**

தப்புகளைச் சரியென்று செய்யும் நீயோர்
தமிழ்மகனு இல்லையிங்கே சங்கம் வைத்தே
இப்பாரில் தமிழ்வளர்த்தே ஏற்றங் கண்டார்,
இயல்பில்லா உனக்குமொரு மதிப்பா வேண்டாம்

**பாண்டி:**

பாண்டியர்கள் மரபென்றும் பண்பை நீக்கிப்
பாரதிலே சீரதனை மாற்ற வில்லை
ஈண்டுற்ற நீகூறும் வார்த்தை தன்னில்
எள்ளளவும் உண்மையதே இல்லை இல்லை!
ஆண்டாண்டாய் அறிவுக்கே முதன்மை தந்து
அன்புநெறி அருளொழுக்கம் அடைந்தோர் தீதி
தாண்டுவரோ? இல்லையிது புதுமை யம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிநீ கூறுவதற் கேது வென்ன?
என்னதவ றதனையிங்கே செய்தோம் நாட்டில்
தப்பிழைத்தோர் உண்டாமோ? சொல்செய்
தோரைச்
சங்காரஞ் செய்துநெறி தழைக்க வைப்பேன்.

கண்:
தப்பிழைத்தோன் நீயாவாய் தரணி தன்னில்
தர்மத்தாய் உனைப்பார்த்துத் தலைகு னிந்தே
அப்பாலே ஓடிவிட்டாள்; அறிவா யாநீ?
அர்த்தமிலா வார்த்தையினுற் பயனுண் டாமோ?

பாண்டி:
ஆத்திரத்தில் அறிவிழந்து பேசு கின்ருய்
ஆன்றபெருஞ் சபையிதென அறியாய் போலும்!
நேர்த்தியிலா உன்பேச்சை நீபெண் என்ற
நினைவாலே மன்னித்தோம்; நீயெவ் வூரோ?
கோத்திரமும் உனக்குற்ற குறையு மென்ன?
கூறிடுக குறையிருந்தால் நீக்கு வேன்நான்.

கண்:
ஊருடனென் குலம்பெயரை கேட்கின்ருயா?
உயிர்யாவும் ஒன்றென்ற கார ணத்தால்
சீருடைய தன்னுடலைப் புருவிற் காக
சிந்தைமகிழ் வுடனரிந்து வேடற் கீந்த
நேரமைந்த அருட்சிபியும் கோவீ தீக்கண்
நெடுந்தேரைச் செலுத்தியபோ தான்கன் றொன்று
தேர்க்காலின் இடைப்புகுந்து மாள ஆவும்
சிந்தைதடு மாறிமணி அடிக்கக் கேட்டு
நீதியது குலைந்ததென நெஞ்சம் விம்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள்வீதி தனில்மகனைக் கிடத்திக் கொன்ற
ஆதிமனு வும்கூடி அமைப்போ டான்ற
ஆட்சிசெய்த அணியார்ந்த சோழ நாட்டின்
சீதவளம் திகழும்பூம் புகாரென் ஊராம்.
செகமீதில் சிறந்தவந்த ஊரில், மேன்மைச்
செழுமையமை வணிகமர பினிலே பூத்து
எத்திசையும் ஏற்றநின்ற மாணுக் கந்தான்
என்றந்தை; எம்மரபில் உதித்த சீல
வித்தகராம் மாசாத்து வானின் மைந்தன்
மேன்மைமிளிர் கோவலரென் கண வனுமே.
இத்தரைக்கு வந்தின்று உன்னால் மாண்டார்
இதையோதி நீதிபெற வந்தேன் மன்னு!

பாண்டி :
குற்றமது செய்யாத ஒருவன் இங்கே
கொலையுண்டான் எனச்சொல்லல் புதுமை யாமே.

கண் :
பெற்றியுள்ள சிலம்பொன்றை இங்கே விற்றுப்
பெறும்பணத்தால் வணிகமதைப் பெருக்க வந்தார்
குற்றமதை செய்யாவென் கொழுநன் றன்னைக்
கொன்றபழி உன்னையிங்கே சாரும் மன்னு!

பாண்டி :
பற்றுடைய இதயத்தால் பாவை நீயும்
பகுத்தறிய மாட்டாமல் வாயில் வந்த
சொற்றெடரால் ஏதேதோ கூறு கின்ருய்!
சொல்லதிலே விளக்கத்தைக் காணேன், இங்கே
தெற்றெனவே விளங்குதற்கு விளக்கமின்றி
செப்பிடுமா வித்தையினைச் செயவந் தாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றதனைப் பாசத்தை எல்லாம் நீக்கி
பரம்பரையாய் நீதியினைச் செய்யும் எம்பால்
அற்றத்தைச் சுமத்தாது விவரம் சொல்வாய்!

கண் :
என்னகத்தைக் கொள்பதியென் காற்சிலம்பை
ஏற்றவிலைக் கேவிற்க எண்ணி இந்த
பொன்னெழிலார் மதுரைக்கே வந்தார், பொல்லாப்
புன்மையுள வஞ்சியெனும் பொற்கொல் லன்இல்
அன்னவரும் சென்றுராம், அந்த வஞ்சி
அகத்தினிலே நஞ்சைவைத்தே அழகாய்ப் பேசி
மன்னவநின் மனைவந்து பொய்யைச் சொன்னுன்.
மனத்தாலே ஆராயா திங்கே நீயும்
என்னுயிராம் கணவனையே கொன்று விட்டாய்!
இதனுலே நீதியினைத் தவற விட்டாய்!

பாண்டி :
இப்போதான் உண்மைநிலை புரிந்தேன் என்றன்
எழில்மனைவி காற்சிலம்பைத் திருட முன்னுள்
இப்பதிக்குள் புகுந்தகள்வன் மனைவி யாநீ?
தப்பதனை அறியாயோ? அவனுக் காக
தகுந்தகதை புனைந்துபழி புகன்று யோநீ?
முப்புரத்தை எரித்தவனின் முன்னும் நின்றே
மூண்டஎரி கண்டாலும் நீதிக் காக
சித்தமது குன்றுமல் எதிர்த்து நின்ற
சீர்மரபு என்மரபு தெரியா யோநீ?

கண் :
புத்திகெட்ட மன்னவனே! வஞ்சி சொன்ன
புன்வார்த்தை கேட்டாய்நீ மறுத்துச் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியத்தை நிலைநாட்டடுஞ் சந்தர்ப் பத்தைத்
தரவில்லை, இருபக்க வாதம் கேட்டு
புத்தியுடன் பொருத்தியன்றோ தீர்ப்பை நீயும்
புகலஇங்கே வழியதனைச் செய்ய வேண்டும்.
நித்தியமார் நெறியதனை நிந்தை செய்து
நீதியிலாத் தீர்ப்பைத்தான் வழங்கி யுள்ளாய்!

பாண்டி :

புதிதான கதைசொல்லப் புறப்பட் டாயா?
புரியவில்லை உன்விளக்கம், சிலம்பைப் பார்த்தேன்
எதுவிதமும் அச்சிலம்பில் மாற்ற மில்லை
என்மனைவி எழிற்பாதச் சிலம்ப தாகும்.

கண் :

விதியோடு விளையாடும் மன்னன் நீயே
விழியாலே உண்மையினைக் காணு வாயோ?
கதியற்ற வாழ்வகற்றி மீண்டும் இங்கே
கதிமோட்சம் காணுதற்கே என்றன் அன்பு
பதிகொண்டு வந்துள்ள சிலம்பென் பாதப்
பாங்கதனை உயர்த்தியுள்ள சிலம்ப தாகும்.
அதைநீயோ அறியவில்லை சதியைச் சூழ்ந்த
அற்பனவன் கதையினையே பெரிதா மென்றாய்;
உன்னூரில் சிலம்பதனை விற்க என்றும்
உரிமைகளே இல்லையெனில் நீதி யிங்கே
இன்னுமுள தென்றுரைத்தல் அழகே யல்ல.

பாண்டி ;

என்னுட்டில் எல்லோர்க்கும் என்றும் நீதி
இருக்கிறதாம் அதையழிக்க முயல மாட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னன்புப் பதிகுற்றம் புரிந்த செய்தி
உண்மைக்கே ஓரணுவும் மாற தல்ல.

கண் :

நன்ருகக் கதைக்காதே மன்னு உன்றன்
நடுநீதி தவறியது முற்றும் உண்மை
என்றனெழில் மறுகாலின் சிலம்பும் - இங்கே
இருக்கின்ற திதனையும்நீ வடிவா கப்பார்!

பாண்டி:

மற்றுமொரு சிலம்புன்றன் காலில் உண்டோ?
வாங்கியிங்கே வந்திடுவாய் காவ லாளா!

(கண்ணகி கழற்றி எறியக் காவலன் எடுத்துச் செல்லல்)
(பாண்டியன் சிலம்பைப் பார்த்தல்)

பாண்டி :

இச்சிலம்பும் என்மகிஷி சிலம்பு போல
இலங்குகின்ற நிலையினையே காணு கின்றேன்;
யாரங்கே ஓடோடிச் சென்றே என்றன்
இல்லாளை எழிற்காலின் சிலம்பு கொண்டு
இச்சபைக்கே உடன்வரவே சொல்வீர் நீரே

(பட்டமகிஷியும் காவலனும் வருதல்)
(பாண்டியன் சிலம்புகளைப் பார்வையிடல்)

பாண்டி :

நேரிழையே! இங்கேவா இவற்றி லுன்றன்
நேரமைந்த பாதத்தில் இலங்கு கின்ற
சிலம்பெதுதான் என்றனெக்குக் கூறுவாயே

(கண்ணகி தன் சிலம்பை எடுத்தல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டி :

இச்சிலம்பே அக்கள்வன் எடுத்துச் சென்ற
என்மனைவி காற்சிலம்பாம் அறிகு வாயே

கண் :

இச்சிலம்பா உன்சிலம்பு? மன்னு! உன்றன்
எழிற்சிலம்பின் உட்பொதிந்த பரல்க ளென்ன?

பாண்டி :

எங்கள்குலப் பெருமைக்காய் மனைவி காலில்
இட்டுள்ள சிலம்புகளின் பரல்கள் யாவும்
பொங்குகடல் சூழ்இலங்கை முத்த தாகும்

கண் :

புகழ்பூத்த என்மரபின் சிறப்பைக் காட்டி
இங்கென்றன் காலினிலே இட்ட தான
மங்களமார் சிலம்பதனின் பரல்கள் தம்மை
மாநிலத்தில் மற்றவர்கள் இடமாட் டார்கள்.

பாண்டி :

அப்படியா? ஏன்என்றே எடுத்துச் சொல்லாய் !

கண் :

அக்காலத் தெங்கள்குலம் சிறந்தே சீரால்
இப்பாரை ஆளுகின்ற மன்னர் தம்மில்
ஏற்றமுற விளங்கியமா பெற்றி யாலே
ஒப்பற்ற விலைகொண்ட மாணிக் கத்தை
உள்ளீடாம் பரல்கள்எனப் பொதிந்துள் ளார்கள்.
தப்புடைய மன்னு! உன் நீதிப் பண்பு
இங்கேதான் தாழ்வினையே கொண்ட தாகும்.
எள்ளளவும் விசாரணைநீ செய்ய வில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்குலத்து நீதியினை உன்னி மேன்மை
உள்ளவழி செல்லவுமே முனைந்தா யில்லை
எங்குலத்து வார்த்தையினில் இனியும் ஐயம்
இருக்காமோ? இருந்தால் நீ பார்ப்பாய் இப்போ!

(கண்ணகி சிலம்பை உடைத்தல்)

சபை :
பரல்களெல்லாம் பாங்குடைய மாணிக் கங்கள் !

பாண்டி :
பாண்டியரா ணியின்சிலம்புப் பரல்கள் முத்தாம்

(பாண்டியன் சிலம்பை உடைத்தல்)

சபை :
முத்துகளே மன்னவனின் பரல்கள் யாவும்

கண் :
சத்தியத்தை தவறவிட்ட மன்னு இங்கே
தையெலென்றன் மறுசிலம்பை உடைப்பேன் பாராய்

(கண்ணகி மறுசிலம்பையும் உடைத்தல்)

சபை :
மாணிக்கம் மாணிக்கம் அந்தோ அந்தோ
மாண்புடைய நீதிவளை வுற்ற திங்கே

கண் :
காணுத ஒன்றுக்குன் கருத்தைப் போக்கி
கண்ணில்லாத் தீர்ப்பதனை வழங்கி னுயோ?
பாருங்கள் ! பாருங்கள் ! சபையுள் ளோரே
பாங்காகப் பார்த்திந்தப் பாண்டி யன்றன்
சீரில்லா தீர்ப்பதனைத் தெரிந்து கொள்வீர்
சிறுமதியான் வஞ்சியின்புன் பொய்யைக் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரில்லாக் கோலோச்சி நேசம் மிக்ச
நெஞ்சுடைய என்பதியைக் கொன்று விட்ட
கூரில்லா மதிகொண்ட கோனைப் பாரீர்
கொடுங்கோலன் செய்குற்றம் புரிந்து கொள்வீர்.

பாண்டி :

தப்பதனைச் சரியென்று நம்பி என்றன்
சால்புடைய சந்ததிக்கே இழுக்குச் செய்தேன்
கப்பியது என்னுட்டில் கயமைக் கங்குல்
கவினுர்ந்த நீதியொளி மறைந்த தாமோ ?
இப்பாரில் இந்நிலையேன்? இறைவா ! என்றும்
இறவாத பெருநீதி இழிவ தாமோ ?

கண் :

எங்கேயுன் நீதிமன்னு? தான்முன் செய்த
இழிவுதரும் பழிக்காக கையை வெட்டி
தங்குலத்து பெருமையமை நீதி காத்த
சத்தியத்தின் நித்தியத்தை உணர்ந்த சீலப்
பொற்கைப்பாண் டியனிருந்த ஆச னத்தில்
புன்மைவழி சென்றுள்ள நீயி ருத்தல்
எற்காமோ? எழிலார்ந்த ஆச னத்தில்
இனிமேலும் ஏறியிருந் தாட்சி செய்தல்
இழிவாகும் பழியாகும் இறங்கு வாயே !

(சிங்காசனம் ஆடுதல்)

கண்:

நீதிக்கே முன்னிடத்தை வழங்கித் தெய்வ
நெறியோடு நின்ருட்சி செய்து வந்த
சாதிக்கே யுரித்தான தகமை தன்னை
தளரலிட்ட உனக்குமொரு கொற்ற மாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதலித்த உனக்கிருக்க நிழலை யீயப்
பெருமைபெறு குடையெற்கோ? வேண்டாம் இங்கே!

(வெண் கொற்றக் குடைதாழ்ந்து முறிதல்)

வெறுங்கோலைப் பிடிப்பதற்கும் தகுதி யில்லா
வேந்தனுன்றன் கைக்குமொரு செங்கோ லாமோ?
அறங்காக்கும் திறனில்லா உனக்கேன் ஆட்சி?
அழியட்டும் அரசனுக்காம் சின்னம் யாவும்!

(யாவும் அழிதல்)

பாண்டி :

ஏதமுடை யோன்மதியால் ஏற்றங் கண்ட
என்மரபுக் குயர்வான நீதி நீக்கி
பூதலத்தில் நானிருக்க இறைவன் என்றும்
பொறுத்திடவே மாட்டானும்! அந்தோ! அந்தோ!
சீதமதிக் குடைக்குலத்துச் சிறப்பு யாவும்
சிதறுண்ட திங்கையோ எனக்கேன் வாழ்வு?
ஏதமுடை என்னுயிரும் இக்க ணத்தே
இழிவுடைய உடல்விட்டுப் பிரிந்து செல்க....

(பாண்டியன் உயிர் பிரிதல் கண்ணகி பட்ட மகிஷியைப் பார்த்துக் கூறல்)

கண் :

என்னரிய பதியயினையே இழந்தே நானும்
ஏதமுடை அமங்கலப்பெண் ஆனேன் இன்று
உன்னிலையும் என்னிலைய தாச்சாம் உண்மை
உணராதார் முடிவிதுவாம் உணரு வாயே !

பாண்டிமகிஷி :

அன்பேஎன் ஆரமுதே ! அறம்பி ழைத்த
அவலநிலை கண்டதன்பின் திறத்தி ஞேடே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமைந்த உன்னுடலை இழந்தீர், அந்தோ ;
இனியெனக்கேன் உயிராமோ? வேண்டாம்
வேண்டாம்
உன்பதத்தைத் தொழுகின்ற உயர்ந்த பெற்றி
உலகத்தில் இல்லையெனிற் கருத்து மில்லை
பத்தாவின் வழிசெல்லல் பண்டுதொட்டு
பாங்குடைய பாவையர்க்கே உரிய பண்பு
இத்தரையில் எனக்கிருப்பின், இக்க ணத்தே
என்னுயிரும் பிரியட்டும் இறைவா இங்கே.

(பாண்டியன் மனைவியின் உயிரும் பிரிதல்)

கண்:

பாண்டியனே உன்றனன்புப் பாவை யோடு
பாரதனை விட்டேநீ பரத வித்து
மாண்டாலும் மன்நீதி வழுவி நின்ற
மண்டலத்தில் மாண்பில்லா அற்ப ருள்ளார்.
மூண்டெரியும் என்னெஞ்சு தணியா திங்கே
முருகற்ற அற்பர்களின் அழிவி னூலே
ஈண்டென்றன் குலப்பெருமை காட்ட வேண்டும்
எங்குமுறை கின்றஅறக் கடவு ளேநீ!
இக்கணத்தில் என்பக்கம் வந்தே இந்த
இழிவுண்ட நாடதனை எரியச் செய்வாய்!

அறக்கடவுள்:

அறம் பிழைத்த இந்த நாட்டிற்
கழிவை நீயும் செய்குவாய்
திறம்மிகுந்த கற்பின்சீர்மை
தெரியநீயும் ஒளிருவாய்!
காவலன்றன் கடமைநீக்கி
கயமையுற்ற நிலையையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவைநீயும் தீயைமூட்டிப்
பாரறியக் காட்டுவாய்!

கண்:

அறந்தனைத் தவறிநின்ற
அற்பர்கள் அழிதல் வேண்டும்
திறன்மிகு என்குலத்து
சீர்மையே நிலைத்தல் வேண்டும்
ஆதலால்

மறந்தனை மருவி நின்ற
மதுரையில் பண்பில் லாதோர்
இறந்தழி வுறுதல் ஒன்றே
இறைவனின் நியதி யாகும்.
எத்திசை தனையும் பற்றி
எரிந்திடச் செய்யும் தீயே
வித்தகர், பெண்டிர், சேய்கள்
மெய்குறைப் பட்டோர் நல்லோர்
சத்தமே கொள்ளார், கண்கள்
தந்திடும் ஒளியே இல்லார்,
சத்தியம் காக்கும் மேன்மைத்
தகவுடை யார்கள், என்றும்
நித்தியன் அருளைக் கொள்ளும்
நீர்மையர், முதியோர் நீங்க
மற்றவர் தம்மை யெல்லாம்
வயங்குமுன் சுடர்கள் ஏந்திச்
சுற்றியே வளைத்துக் கொள்வாய்;
சூழ்வினை யாளர் எல்லாம்
குற்றமே புரிந்தார்; என்றன்
கொழுநனைக் கொன்றார்; உள்ளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றினுல் அவரின் பண்பை
பாரகம் அனைத்தும் காணப்
பற்றியே வளைத்தெரித்துப்
பாங்கினை ஓங்கச் செய்வாய்!
நீதியின் நிலையை நீக்கும்
நீசர்கள் அழிக! இந்தப்
பூதலம் தனிலே மேலாம்
புண்ணியர் தூய்மை ஓங்க
ஓதிய நெறியை உண்மை
உணர்வுடன் கொண்டே, தெய்வச்
சாதியாம் தமிழர் வாழ்ந்து
தழைதிட அருளு வாயே

— திரை —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*

இந்தக் கவிதை நாடகத்தை
எழிலார் நூலாய் ஆக்குதற்குச்
சிந்தை யினிக்க உதவியவர்
சேவை சிறந்து சீர்பெற்றுச்
சந்தத் தமிழ்ப்போல் தழைத்தோங்க
சந்ததம் அன்னை சத்தியரே
வந்தருள் செய்வாள்; இவர் எல்லாம்
வண்மை பெற்றே வாழியவே!

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வல்லை நெசவாலை** யாழ்ப்பாண
வடவெல்லையில்
வாய்த்ததொரு நிறுவனமதே
நல்லரக வேட்டிகள் சேலைகள்
சால்வைகள்
நவமான துணிவகைகளும்
பல்வகைத் துவாய்களொடு
கைத்துடைப்பங்களும்
பாங்குடன் பெற இயலுமே
எல்லோரும் வருகுவீர்
இன்பமாய்க் கொள்ளுவீர்
இதமுடன் அனுதினமுமே.

உறுப்பினர்கள்:

திருவாளர்கள்: சி. வீ. வீரசிங்கம் (தலைவர்)

| | |
|---|---|
| மா. கனகசபை, | அ. சி. குமாரசாமி, |
| க. பொ. செல்லையா, | க. இராசலிங்கம், |
| சி. வே. சிவசுப்பிரமணியம், | ஞா. விக்னராசா (டாக்டர்) |
| ப. நவரத்தினம், | தா. கே. கணபதிப்பிள்ளை, |
| சி. அப்புக்குட்டி, | |

ச. ஞானமூர்த்தி (காரியதரிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழில் பற்றுடையோன்
சிவநா மத்தை
செப்புகின்ற சிந்தையுளான்
சீலம் பேணி
நந்தமிழர் பண்பாட்டைக்
காப்போன் நல்ல
நற்றெண்டன் **காஞ்சிமா வடிவேல் அன்பால்**
இந்தளறில் நூலாக்கம்
எய்து தற்கே
இன்முகத்தில் இளநகையே
பூத்துப் பொங்க
தந்துள்ள உதவியென்றும்
தமிழ்போல் ஓங்கித்
தழைத்திடவே இறைவனருள்
செய்வான் வாழி.

செ. காஞ்சிமாவடிவேல்
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களைப் பேணுகின்ற
குன்றாப் பக்திக்
குணமோடு கொடைகொடுக்கும்
இனிய நெஞ்சம்
நாவலரைப் பாவலரை
அணைக்கும் கைகள்
நற்றமிழ்ப்பா தேவாரம்
ஓதும் சீர்வாய்
பூவிலொன்றிப் பொலி இராமசாமிப் பிள்ளை
புகழ் பொலியும் வல்வெட்டித்
துறையில் பூத்தோன்
ஆவலுடன் இந்நூலை
ஆக்கம் செய்ய
அன்பதனை உதவியெனக்
காசி தந்தான்!

வ. வ. இராமசாமிப்பிள்ளை
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையர்க் கேற்றநல்
நாகரிகச்சேலை
நம்பியர்க் கான நல் வேட்டிகளை
எங்கள் சுன்னுகத்தில்
உள்ள கணேஸ் லூம்ஸார்
எழிலுறவே தயார் செய்வதனுல்,
நாட்டுப் பொருளை
விரும் பிடுவீர் அதை
நாடியே சென்று பயனடைவீர்!
நாட்டுத் தொழிலையே
ஆதரிப்பீர் எங்கள்
நாட்டவர் ஓங்க
வழிவகுப்பீர்.

கணேஸ் லூம்ஸ்
சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கடிகாரம் றேடியோ பேனுக்கள்
பூவையர் நாடும் பவுடர் ஸ்னோ
எதனையும் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி
**ரதிஸ்டோர்** சென்றுமே வாங்கிடுவீர்!
கைக்கடி காரம் திருத்திக் குறித்துள
காலத்தில் தந்திடவே ரதிவேக்ஸ்
உத்தர வாதம் கொடுத்திடுமாமுடன்
உங்களுக்கே சேவை செய்திடுமாம்

உரிமையாளர்: ம. நடராஜா
44, 46, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகாலம் பாவிக்க
வல்லதுவாய் நீண்ட
பாவனைக் கேற்ற
பலமுளதாய்
அலுமின்ய எவர்சில்வர்
பாத்திரம் கொள்ளவே
அனைவருமே இங்கு
கூடி வந்தே
ஈழத் திருநாட்டில்
உள்துவாம், எழில்
என்றுமிசைந்து சிறந்ததுவாம்
**யாழ் மெட்டல் இண்டஸ்ரீ**
ஆக்குவதை யிங்கே
யாவரும் கொள்ளவே
முன்வருவீர்!

உரிமையாளர்: தா. திருநாவுக்கரசு
யாழ் மெட்டல் இண்டஸ்ரீ,
250, 252 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையர் அங்கவனப்பினுக்கே
நல்ல
நாகரிக அழகூட்டவல்ல
பொங்கும்புதுப் பொலிவோ டிங்கிலங்கும்
பொன் தங்கத் தோடு வைரமதால்;
சீர்பெறச் செய்த நகைகளையே தினம்
தேர்ந்து எடுத்துநீர் வாங்கிடவே
நேராக **யாழ்ப்பாணம்**
கஸ்தூரியார் வீதி
**ஹாஜியார் மாளிகை** நாடிடுவீர்.

ஹாஜியார் நகைமாளிகை
82/6, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சார, சைக்கிள்
உபகரணத்துடன்
மேன்மை பொருந்து சைக்கிள் களாய்
என்றும் உழைத்திடும்
**ரேட் மாஸ்ரருடன்**
ஏற்றமுடையரஜ் ஆதியன,
**சுன்னுகம் எலக்ரோ லக்ஸ்**
ஸ்தாப னத்தாரிடம்
தொடர்புகொண்டால் நீங்கள்
பெற்றிடுவீர்.

உரிமையாளர்: ஆர். லக்ஷிமிகாந்தன்
எலக்ரோ லக்ஸ்
சுன்னுகம்.

○ ○ ○

வாசமிகும் பச்சைச் சந்தனமும் குளிர்
வாய்ந்த சுகந்தப் பன்னீர் வகையும்
தேசுதரும் அத்தர் குங்குமமும்
நோயைத்
தீர்க்கும் மருந்துச் சரக்குகளும்
**சுன்னுகம் ராஜா மெடிக்கல்** ஸ்டோரினில்
தாராளமாகக் கிடைத்திடுமே
நேராக வந்ததங்கே பெற்றிடுவீர்—உளம்
நேரும் நிறைவையே உற்றிடுவீர்.

ராஜா மெடிக்கல் ஸ்டோர்
சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணகத்தில் மற்றவர்தம்
துயரைப் போக்கி
வாழ்வதனை வழங்குகிற
வளமே கொண்ட
திண்ணியசீர் வல்வெட்டித்
துறையில் பூத்த
திரு **வேலுப்பிள்ளையவரை**
நினைவு செய்து
வண்ணமுற இந்நூலை
ஆக்கு தற்கு
மனத்துடனே **யீந்த மனோகரனை** எங்கள்
எண்ணமதில் வைத்திடுவோம்
இளமை யுள்ளம்
இலங்கியொளி பெற்றோங்க
வாழ்த்து வோமே.

க. மனோகரன்
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிச் சிறுவர்க்கே
ஏற்றன வாம்பல
பாடநூல் கொள்ளவே
வேண்டுமெனில்
சுன்னுகம் **தனலக்குமி**
புத்தக சாலைக்குச்
சென்றிடுவீர் அங்கு பெற்றிடுவீர்!
செப்பமாய் அச்சினில் புத்தகம் மற்றைய
தேவைகட்கேயான
வேலைகளை
திட்பமும் நுட்பமும்
சேரவே செய்திடத்
**திருமகள்**
அச்சகம் சேர்ந்திடுவீர்.

தனலக்குமி புத்தகசாலை
திருமகள் அழுத்தகம்
பிரதானவீதி, சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்தி லேயெழும்
இனியபல கருத்துக்கள்
எழிலான விளம்பரங்கள்
வண்ணப் பதிப்பாக்க
வல்லதோர் அச்சகம்
மாண்புமிகு இரஞ்சனாவே
கண்ணைக் கவர்ந்திடும்
காகிதக் கட்டுகள்
கவினுன எழுத்துவகைகள்
திண்மைத் திறத்தொடு
செப்பமாய்ச் செய்திடத்
தேடியே ஓடி வருவீர்!

இரஞ்சனா அச்சகம்
98, விவேகானந்த மேடு
கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கன வாழ்வினைக்
கைக்கொண் டொழுகியே
சேமிக்க வேண்டுமெம் **யாழ்ப்பாண**
**ஐக்கிய லாபநிதி**யினை
நீங்களே
அண்டிவந்தாற் பயன் கொண்டுயர்வீர்!
வட்டி குறையநாம் ஈடுவைக்க
நல்ல
வாணிபமோடு தொழிலோங்க
திட்டமிட்டேயிங்கு
சேமிக்கவே வழி
செய்திடுமாம் **ஐக்கிய லாபநிதி**

கனகசபை. கயிலைநாதன்
யாழ்ப்பாண ஐக்கிய லாபநிதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிவையர் ஆடவர்
அன்பு மதலையர்
அன்னையர் தந்தையர் வாலிபர்க்கே
உரிய
பிடவைகள்
**யாழ்.** பெரியகடை
**அமிர்தாஸில்** உள்ளதே
பெற்றிடுவீர்.

அமிர்தாஸ்
யாழ்ப்பாணம், பெரியகடை.

○ ○ ○

சங்கை தரும் நல்ல
தங்க நகை—அன்புத்
தங்கையர் மங்கையர்க் கேற்றநகை
எங்கள் **மீரான் சாகிப்** மாளிகையில்வந்து
எல்லோருமே பெற்றுச் சென்றிடுவீர்.

மீரான் சாகிப் (கே. என். எம்.)
கன்னாதிட்டி- யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையர் ஆடவ ரோடுசிறுவர்கள்
நாடும் புதுமை பொருந்துவதாய்
பொங்கும் பொலிவுப் புதுப்புது ஆடைகள்
வாங்க வவுனியா நற்பதியில்
**ஜோதி ரெக்ஸ்ரைலையே**
நாடிடுவீர் அங்கே
ஜோராகக் கண்ணைக் கவருவதை
நீதிவிலைப்படி தந்திடுவார் தினம்
நீங்கள் பெற்றே மகிழ்வுற்றிடலாம்.

உரிமையாளர்: **அ.** நல்லதம்பி
ஜோதி ரெக்ஸ்ரைல்ஸ்
பஜார்வீதி, வவுனியா.

○ ○ ○

பனையோலை புல்லினுல்
பாட்டாளிகள் செய்த
பக்குவ மானபொருட்களையே
அனைவரும் வாங்கியே
ஆதரித்தே யெங்கள்
அன்புத் திருநாட்டில் ஊக்குவிக்க
யாழ்ப்பாணம் பெரிய கடைச்
சந்தை தன்னிலே
இலங்கு **திரு.** சுப்ரமண்யம் கடை
ஏகிடுவீர் ஈழப்
பொருட்களையே நீவிர்
ஏற்றிடுவீர் எமை ஆதரிபீர்

ந. சுப்ரமண்யம்
52, பெரியகடை மார்க்கட்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்நகர்** பிரதான **வீதி**யிலே - **பத்தாம்**
எண்ணை இலக்கமாய்க் கொண்டிலங்கும்
மாளிகை தன்னையே நாடிடுவீர்—**கலை**
**வாணி** திருப்பெயர் கண்டிடுவீர்.
அச்சகத் தோடுயர் புத்தக சாலையும்
அழகுற நன்றே அமைந்திருக்கும்
நிச்சயமாக நிதானமுடன் தேவை
நிறைவுறவே பயன் பெற்றிடுவீர்.
**தம்பித்துரை** சமாதான நீதிபதி
தாபனமாம் **கலைவாணி** - அதில்
நம்பிக்கை நாணயம் கொண்டுமே நீங்களும்
நாடிடுவீர் பலன் தேடிடுவீர்.
**கண்டி**யிலே கிளைத் தாபனமாகவும்
காட்சியளிக்கும் **கலைவாணி**
சென்றிடுவீர் **திருகோணமலை** **வீதி**
சேர்ந்து **கல்விப்** பொருள் கொண்டிடுவீர்.

உரிமையாளர்:
கு. வி. தம்பித்துரை ஜே. பி.
கலைவாணி அச்சகம்,
10, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லூன்றி விநாயகனுர்
ஆல யத்தை
மேன்மையொளிர் சைவநெறி
ஓங்கப் பேணும்
நல்லமனத் திருத்தொண்டன்
இராஜ ரத்னம்
நமதுகவி நூலாக
ஆக்க மீந்தான்;
வல்லபரன் ஆசியவர்க் கென்றும் ஆகி
வண்டமிழ்போல் வளர்வுற்று, தொண்டே செய்ய
நல்லருளை நாதனவன் நயந்தே தந்து
நாளெல்லாம் நலமோங்கக் காப்பான் வாழி

சோ. இராஜரத்தினம் (செட்டியார்)
வில்லூன்றி விநாயகர் ஆலயம்,
யாழ்ப்பாணம்.

○ ○ ○

விற்பனைப் பொருட்களை விளம்பரம் செய்துங்கள்
வியாபாரம் தன்னைப் பெருக்கிடவே
அற்புதப் பேசும்படத் திலவற்றையே
ஆக்கியே என்றைக்கும் ஊக்குவிக்கும்
எங்கள் **மகம்மூவிஸ்** தாபனத் தாரொடு
யாவருமே தொடர்புற்றிடுவீர்
உங்கள் வியாபாரம் ஓங்கிடவே வழி
உற்றிடுவீர் பயன் பெற்றிடுவீர்.

கே. கே. வி.
229/9, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுக் கழகினைக்
காட்டுவ தோடு எம்
கருத்தைக் கவர்ந்து விருந்தூட்டும்
திண்ணிய மெய்ம்மைத்
**திருக்குறள்,** சீர்மிகு
**சித்திர கலா,** நற் குருபரனும்
பாவனைக் கேற்ற கலண்டர்கள், மற்றைய
பஞ்சாங்க ஆபீஸ் கலண்டருடன்
தேவைக் குகந்த **டெஸ்க்** டயரிகளும் நல்ல
சீர்பெறச் செய்துள பேர்ஸ்டயரி
மெய்கண்டான் அச்சகத்தோடு
தொடர்புற்றே
விரும்பியே நீங்களும் வாங்கிவிட்டால்
செய் தொழில் காலம் எவையெனவே நீவிர்
தேர்ந்திடலாம் பலன் ஓர்ந்திடலாம்.

திரு. நா. இரத்தினசபாபதி
மெய்கண்டான் அச்சகம்,
161, கடல் வீதி,
கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சார உபகரணம் - நல்ல
விடயங்கள் தந்திடும்
வானெலியிற்
பின்னிடும் உபகரணம் - உயர்
பேசும் சினிமா தரும் இசைத்தட்டுகள்
ஈழத்தில் இறக்குபவர் - நல்ல
றேடியோ சேவிஸ்சீர் இன்ஜினியர்ஸ்
**பரமவுண்ட் ஏஜென்ஸியாம்** - என்றும்
பக்குவமாகச் சேவை செய்திடுவார்
தரமுள்ள பொருட்களையே - நீங்கள்
தக்க விலைகொடுத்துக்
கொண்டு செல்லுவீர்.

கட்டிடங்களுக்குரிய நற்பொருட்களும்
கடின முடையவல் **விரும்பு**களும்
இட்டமுடன் இன்ஜினியஸ்ர்க்கேற்ற பொருளும்
இறக்குமதி செய்திடுவார் ஈழந்தனிலே
**அலன் றெக்ஸி என்டப் பிறைஸெஸ்**
நாடிடுவீரே - அனுதினமும் தேவைகளைப்
பூர்த்தி செய்வீரே.

உரிமையாளர்:

எஸ். தர்மலிங்கம்
பரமவுண்ட் ஏஜென்ஸி
அலன் றெக்ஸி என்டப் பிறைஸெஸ்
தபாற்பெட்டி: 715
தொலைபேசி: 31509
தந்தி: "பைட்லிற்றி"

50 3/6, 50 3/3
3வது மாடி
கெட்றிக் பில்டிங்
என். எச். எம். அப்துல்காதர் வீதி,
(றெக்கிளமேசன் வீதி,)
கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரார் சிந்தை
தெளிவுடையோன் செந்தமிழ்ப் பற்றில்
திளைத்திருப்போன் நாரா யணதாஸ்
அவன்நாமம் நலமே வாழி! நாளெல்லாம்!

**வி. நாராயணதாஸ்,**
67, வான்ரூயன் வீதி,
கொழும்பு—13.

○ ○ ○

திங்கள் வதனத்தைக்
கொண்டநற் செல்வியர்
சீர்மிகு மங்கையர் தங்கையர் தம்
அங்கங்கள் மங்களம் கொண்டே இலங்கிட
அரியபொன் தங்க வைரநகை
**திருவளர் செல்வ நாயகத்தாரின்** சீர்த்
**தெய்வா நகை மாளிகை** தன்னிலே
விரும்பி வந்தால் நிதம் பெற்றிடலாம் மனம்
மேவும் திருப்தியே உற்றிடலாம்.

உரிமையாளர்:

செ. செல்வநாயகம் B. Sc.,
தெய்வா நகை மாளிகை
173, காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமான நகைகளைச் செல்வியர்
தோகையர் இங்கு பெறுவதற்கு
**கந்தையா அன்சன்ஸ்**
நகைமாளிகைக்கே
வந்திடுவீர் பயன் கொண்டிடுவீர்.

**நா. வ. கந்தையா அன் சன்ஸ்.**
76/1, 2, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

○ ○ ○

சீர்பெறச் செய்த செருப்புகள் மேசுகள்
செல்வியர்க்கான பொருட்களையே
**நீர்கொழும்பிலுள்ள பியூட்டி ஹவுஸினில்**
நிதான விலைக்குநீர் பெற்றிடலாம்

பியூட்டி ஹவுஸ்
6, கிறீன் வீதி,
நீர்கொழும்பு.

○ ○ ○

ஆங்கிலம் செந்தமிழோடு
சக்கிருதம்
ஆகிய நல்ல எழுத்துக்களால்
பாங்குடன் அச்சுப்
பதிப்புகள் செய்துநற்
பக்குவமாகப் பெறுவதற்கே
சுன்னுகம் உள்ள **கலாதேவி**
அச்சகத் தோடு
தொடர்பினைக் கொண்டிடுவோர்
என்னுளும் நற்பயன் கொண்டிடலா முங்கள்
இதயத்திலே யிதை வைத்திடுவீர்.

கலாதேவி அச்சகம்
ஸ்டேசன் வீதி,
சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிறநூல்கள்

நிறை நிலா:

விற்பனையாளர்:
தனலக்குமி புத்தகசாலை,
சுன்னுகம்.

சிறுவர் பாடல்:

விற்பனையாளர்:
சண்முகநாதன் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

★

ஆசிரியர் கூட்டாக எழுதிய நூல்கள்

மத்தாப்பு:

எழுதியோர்:
(இ. நாகராஜன், கனக செந்திநாதன்,
சு. வே., குறமகள்,
எஸ். பொன்னுத்துரை.)

நீதிக்கரங்கள்:

எழுதிய கவிஞர்கள்:
(இ. நாகராஜன், ச. கதிரேசர்பிள்ளை,
அம்பி, நா. ஆறுமுகம்,
வித்துவான் ஆறுமுகம்.)

மத்தாப்பு, நீதிக்கரங்கள் என்பவற்றின்
தொகுப்பாசிரியர்:

இரசிகமணி கனக செந்திநாதன்,
குரும்பசிட்டி, தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org